375

1-4-55

# கண்ணன்

## குழந்தைகளின் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF ... 13 APR 1955 MADRAS

375 / 2-55

# செய்திகள்

## ஹெலன் கெல்லர்

அமெரிக்காவிலிருந்து இந்திய சர்க்காரின் அழைப்பின்பேரில் இந்தியா வந்திருக்கிறார் டாக்டர் ஹெலன் கெல்லர் என்ற அம்மணி. இவருக்குக் காது கேட்காது; கண்ணும் தெரியாது. குழந்தைப் பருவத்திலே வாயினாலும் பேச முடியாமல் இருந்தார். இப்போது இவருக்கு எழுபத்தைந்து வயசாகிறது. இன்று இவா பிரசங்கங்கள் செய்கிறார். கண், காது, நா இவற்றை இழந்த அபாக்கியசாலிகளுக்கு இவர் அரிய சேவை செய்துவருகிறார். பல நூல்கள் இயற்றியிருக்கிறார். இவருக்குக் கண், காது, நாக்கு மூன்றுமாக இவருடைய காரியதரிசி பாலி தாம்ப்ஸன் என்ற பெண்மணி விளங்குகிறார். நாம பேசும்போது பாலி தாம்ப்ஸன் கை விரல்களினாலேயே ஹெலன் கெல்லர் கையில் டைப் அடிப்பதுபோல் தொடுகிறார். அதிலிருந்து நாம் என்ன பேசுகிறோம் என்பதை ஹெலன் கெல்லர் புரிந்துகொண்டு உடனே நமக்குப் பதில் சொல்கிறார். சம்பாஷணை செயய நேரம் ஆவதில்லை. அது மட்டும் இல்லை. புஷ்பங்களைத் தொட்ட மாத்திரத்தில் அவை என்ன என்ன புஷ்பங்கள் என்று இவர் சொல்லிவிடுகிறார். சங்கீதக் கச்சேரியைக் கூட இவரால் பாலி தாம்ப்ஸன உதவியுடன் கேட்டு ரஸிக்க முடியும். தம்மைப்போல ஊனமடைந்தவர்களுக்காகத் தம வாழ்க்கையையே டாக்டர் ஹெலன் கெல்லர் பயன்படுத்தி வருகிறார். விடாமுயற்சியினாலும் தளராத நம்பிக்கையினாலும் இத்தகைய சக்தியைப் பெற்றவர் டாக்டர் ஹெலன கெலலர். ஊனமுற்ற இவருடைய அவயவங்களாகத் தம்மையே அர்ப்பணித்துக்கொணடு சிறந்த பணியும் தியாகமும் செய்தவர் இவருடைய காரியதரிசி பாலி தாம்ப்ஸன். இவர்கள் சென்னையில் பல நிகழ்சசிகளில் கலந்து கொண்டார்கள்.

## பெனிஸிலின் கண்டு பிடித்த மேதை

பெனிஸிலின் ஓர் அற்புதமான மருந்து; சஞ்சீவி போன்றது. சென்ற மகா யுத்தத்தில் பதினாயிரக்கணக்கான உயிர்களைக் காக்க உதவியது இந்த மருந்து இன்றும் அது நமக்கு எத்தனையோ விதங்களில் பயன் படுகிறது. இந்தப் பெனிஸிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தவர் அலெக்ஸாண்டர் ஃபிளெமிங் என்ற மேதை. இவர் நோபெல் பரிசு பெற்றவர். எழுபத்து மூன்றாம் வயசில் இவர் சமீபத்தில் காலமானது எல்லாருக்கும் வருத்தத்தைத் தரும் செய்தி. இவர் இரண்டு வருஷங்களுக்கு முன்பு சென்னைக்குக்கூட வந்திருக்கிறார்.

## நேருஜியை வாழ்த்துவோம்

சமீபத்தில் நேருஜி நாகபுரிக்கு விஜயம் செய்தார். அவர் வழக்கம் போல் திறந்த மோட்டாரில் விமான நிலையத்திலிருந்து நகருக்குள் சென்றார். வழி நெடுகிலும் ஜனங்கள் அவருடைய தரிசனத்துக்காக நின்று சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். அவருடைய கார் ஒரு மூலையில் திரும்பியபோது குறுக்கே ஒரு ரிக்ஷா எதிர்ப்பட்டது அவருடைய கார் சிறிது நின்றது. அடுத்த நிமிஷம் ரிக்ஷாவை இழுத்[illegible] வந்த ஒரு வெறியன் நேருஜியின் மோட்டாரில் தாவினான். கையில் ஒ[illegible] கத்தி. நேருஜி அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டார். உடனே அவ[illegible] எல்லாரும் சேர்ந்து பிடித்துவிட்டார்கள். தெய்வாதீனமாக உயி[illegible] தபிய நேருஜி இன்னும் பல காலம் நம்மிடையே இருக்க அருள் புரி[illegible] மாறு நாமெல்லோரும் இறைவனைப் பிரார்த்திப்போம். தீரர் நேருஜி[illegible] வாழ்த்துவோம்.

# கண்ணனில்

பிரபல எழுத்தாளர்

ரா ஜி

எழுதும்

புதிய தொடர்கதை

## குண்டுர் சீமா

விரைவில்

வெளிவருகிறது

கண்ணன், மயிலாப்பூர்.



# கண்ணன்



OFFICE OF THE ... BOOKS
13 AP 1955
MADRAS


## பொருளடக்கம்


மலர்: 6 இதழ்: 7

1-4-'55



| | |
|---|---|
| குழந்தைகளே! | பக்கம் 2 |
| அறிவிற் சிறியோர் | .. 3 |
| லீடர் மணி | .. 5 |
| கிறிஸ்டல் ரேடியோ | .. 10 |
| நாயுடுவின் படம் | .. 13 |
| பெரியோரின் எளிமை | .. 19 |
| கேளுங்கள் சொல்கிறேன் | 22 |
| அன்னே | .. 25 |
| பாரஸீக ரோஜா | .. 29 |
| பாலர் கவியரங்கம் | .. 31 |
| புதிர்க் கேள்விகள் | .. 32 |
| சந்திரகிரிக்கோட்டை | .. 33 |
| எங்கள் பகுதி | .. 39 |
| செய்திகள் - 2 - அட்டை | |
| பேனு நண்பர்கள் - 3-அட்டை | |



வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4


கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

# குழந்தைகளே!

நீங்கள் எல்லாரும் பரீட்சையின் கெடுபிடியில் இருக்கிறீர்கள். எந்தக் குழந்தையின் முகத்தைப் பார்த்தாலும் அதில் கவலையே தேங்கி யிருக்கிறது. நன்ருகப் படிக்க வேண்டுமே; நன்ருகப் பரீட்சையில் மார்க்குகள் வாங்கித் தேற வேண்டுமே என்ற கவலைதான். நீங்கள் கவலையோடு இருப்பதைப் பார்த்து 57,000 எஸ். எஸ். எல். ஸி. மாணவ மாணவிகள் குஷியாக இருக்கிருர்கள். அவர்களை வருத்திய பயமெல்லாம் மார்ச்சு பத்தொன்பதாம் தேதியோடு மறைந்துவிட்டது.

ஒன்று மட்டும் உங்களுக்கு இப்போதே சொல்லி விடுகிறேன்: எதற்கும் கவலை வேண்டாம். மனசிலே பயத்தோடு படிக்காதீர்கள். தைரியமாகப் படியுங்கள்; தைரியத்தோடு பரீட்சை எழுதுங்கள். தைரியத்துடன் மேல் வகுப்புக்கு நீங்கள் போவது நிச்சயம்.

என்னதான் பரீட்சை வந்தாலும் கண்ணன் பார்ப்பதை நீங்கள் விடமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். அவன் உங்களுடைய சிறந்த நண்பன். கவலையை மாற்றும் கற்பக விருட்சம். உற்சாகத்தையும் தெம்பையும் ஊட்டும் டானிக். படித்துக் களைத்துச் சோர்ந்துபோன போதெல்லாம் கண்ணன் உங்களுக்குக் களிப்பூட்டுவான். பாட புத்தகங்கள் எல்லாம் உங்களுக்குச் சாப்பாடு மாதிரி. சாப்பிடாமல் இருக்கலாமா? இருக்கத்தான் முடியுமா? கண்ணனே உங்களுக்கு நொறுக்குத் தீனி மாதிரி. இதுவும் வேண்டியதுதானே! இல்லாமல் முடியுமா?

கண்ணனில் வரும் பொது அறிவுக் கேள்வி பதில்கள் எல்லாம் உங்களுக்கு மிகவும் பயன்படுகின்றன என்று தெரிந்துகொண்டேன். இது மிகவும் சந்தோஷமான செய்தி. ''ஏன், உங்கள் பத்திரிகையில் பெண்கள் அதிகம் பேர் ஒன்றும் கேட்பதில்லை?'' என்று ஓர் ஆசிரியை கேட்டிருந்தார். என்ன பதில் சொல்வது? பெண் குழந்தைகள் எதுவும் தெரியாதவர்களாகக் காட்டிக்கொள்ள விரும்பவில்லையோ, என்னவோ? விஞ்ஞானக் கேள்விகள்தான் கேட்கவேண்டும் போலிருக்கிறது என்று சிலர் எண்ணியிருக்கிருர்கள். அது சரியல்ல. உங்களுடைய தினசரி வாழ்க்கையில் நீங்கள் சரிவரத் தெரிந்துகொள்ள வேண்டிய எந்த விஷயமாக இருந்தாலும் கேட்கலாம். கேள்வி-பதில்களை நீங்கள் வரிசையாகத் தொகுத்தும் வைத்துக்கொள்ளலாம். இன்றைக்கு மட்டுமல்ல; இந்தக் கேள்வி பதில்கள் உங்களுக்கு என்றைக்கும் உபயோகமாக இருக்கும். பள்ளிப் பரீட்சைக்கும் பயன்படும்; வாழ்க்கைப் பரீட்சைக்கும் பயன்படும்.

ஒரு வருஷ காலமாக உங்களை மகிழ்வூட்டி வந்த தொடர்கதை 'சந்திரகிரிக் கோட்டை' இந்த இதழில் நிறைவுறுகிறது. இந்தக் கதையை எப்படி எப்படியெல்லாம் பாராட்ட முடியுமோ அப்படியெல்லாம் பாராட்டி உற்சாகம் காட்டிய உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடிய விரைவில் அதைப் புத்தகமாக வெளியிடுவோம். தொடர்கதையைத் தொடர்ந்து சேர்க்க முடியாமல் போனவர்கள் அது வரையில் பொறுத்திருக்க வேண்டியதுதான்.

முன்பே கூறியபடி விரைவில் மற்ருெரு தொடர்கதை ஆரம்பமாகும். பல பத்திரிகைகளில் குழந்தைகளுக்காக எழுதிப் புகழ் பெற்ற பிரபல எழுத்தாளர் ராஜிதான் அதை எழுதுகிருர். படிக்க ஆரம்பித்து விட்டீர்களோ, அடுத்த இதழ் எப்போது வரும் என்று பறக்கத் தொடங்கிவிடுவீர்கள் என்பது நிச்சயம்.

அதிருஷ்ட நம்பர் இருக்கும் கண்ணன் இதழில், தொடர்கதைப் பகுதிகளை மட்டும் கிழித்துக்கொண்டு, பாக்கியை அனுப்பலாம்.

—ஆசிரியர்.

## காட்டூர் - கண்ணன்

1. அநுபம ரென்ற ரிஷி வசிக்கும்
   ஆசிரமத்தில் நாய் ஒன்று
   இனத்திற் குறிய சிறு புத்தி
   இல்லா திருந்து வாழ்ந்ததுவாம்;

2. வாலைக் குழைத்து வணங்கி நிற்கும்
   வழி நடந்தாலவர் கூடவரும்
   ஏவல் செய்யும் காவல் நிற்கும்
   இருகண் மூடி ஜபம் செய்யும்.

3. நாய் பிறப்பாயினும் அது செய்யும்
   நற்செயல் கண்டு ரிஷி மகிழ்ந்து
   சேயினும் மேலாய் அன்பு வைத்துச்
   சிறப்புடன் வளர்த்து வந்தாராம்.

4. கலைமான் ஒன்று அந் நாயைக்
   கண்டு வெகுண்டு கொம்ப சைத்துக்
   கொலை செய்திடவே துள்ளி வர
   குணவான் அநுபம ரிஷி அறிந்தார்;

5. கமண்டல நீரைத் தெளித் திட்டார்.
   கணத்தில் நாயுமோர் மானுச்சு
   துரத்தி அடித்தது தனைக் கொல்லத்
   துணிவுடன் வந்த கலைமானை.

6. மானுருக் கொண்ட நாய் ஒருநாள்
   மாமுனி அருகில் படுத்திருக்க
   கானகத் தலையும் வேங்கை ஒன்று
   கடுகியே வந்தது அதைக் கொல்ல.

7. வேங்கையைக் கண்ட முனிவர் மானை
   வெகுண்டெழும் கொடும் புலி
   யாக்கி விட்டார்.
   தீங்கு நினைந்த வன வேங்கை
   திகிலடைந் தெங்கோ ஓடியது.

கிறேன்'' என்று சொல்லிவிட்டு, சந்துரு டிரைவருடன் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டான்.

மணிக்கு மனசு திக் திக்கென்று அடித்துக்கொண்டேயிருந்தது. அந்த வீட்டுக்காரரிடம் அம்மா பிள்ளை இரண்டு பேருக்குமே யோசனையாக இருக்கும்போது, அவனுக்கு மட்டும் தைரியம் எங்கிருந்து வரும்? அவர் வந்து என்ன சொல்வாரோ, ஏது செய்வாரோ என்று பயந்துகொண்டே உட்கார்ந்திருந்தான்.

பதினைந்து இருபது நிமிஷத்துக்கெல்லாம் கார் திரும்பி வந்துவிட்டது. ஆஜானுபாகுவாக ஒரு மனிதர் சூட்டு ஹாட்டெல்லாம் போட்டுக்கொண்டு பின் சீட்டிலிருந்து இறங்கினர். சந்துரு ஒரு தோல் பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தான். அவர்தான் சந்துருவின் அப்பா என்பது தெரிந்தது. அவர் ஜம்மென்று ராஜா மாதிரி முன்னல் வர, பின்னல் வந்த டவாலிச் சேவகன் ஒருவன் பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு வந்து வைத்தான்.

சந்துருவின் அம்மா அவருக்கு வேண்டியவைகளை எடுத்துக் கொடுத்து, அவர் போட்டிருந்த ஆடைகளை வாங்கி உள்ளே கொண்டுபோய் வைத்தாள்.

அவர்களுடைய பெண் வஸந்தி உள்ளேயிருந்து ஓடிவந்து அப்பாவின் காலைக் கட்டிக்கொண்டு, ''எனக்கு என்ன அப்பா வாங்கிண்டு வந்திருக்கே? நான் கேட்டதெல்லாம் வாங்கிண்டு வந்திருக்கியோ?'' என்று கேட்டாள்.

''எல்லாம் வாங்கி வந்திருக்



கேண்டி கண்ணு!'' என்றார் அப்பா.

வஸந்தி திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவள்போல, ''இந்தப் பையன்தான் அப்பா, நேத்திக்கு என்ன பண்ணினான்—எனக்கு அப்படியே பெரிய பயமாப் போயிடுத்து அப்பா—அப்படியே நம்ம மோட்டார் இருக்கு பாரு, அதுகிட்ட அப்படியே மயக்கம் போட்டு விழுந்துட்டான் அப்பா!'' என்றாள்.



அவளுடைய அம்மாவும் சந்துருவும் பல்லைக் கடித்துக் கொண்டார்கள். வந்ததும் வராததுமாய் இந்தப் பெண் எதையாவது கிளப்பி, அனர்த்தம் ஏற்படப் போகிறதே என்று அவர்கள் பயந்துகொண்டேயிருந்தார்கள். அவர்கள் நினைத்த படியே ஆகிவிட்டது.

அவர் உடனே சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ''பையனா, எந்தப் பையன்? யார் அவன்?'' என்று கேட்டார். மணி ஒடுங்கிப்போய் ஒரு மூலையில் எழுந்து நின்றான். சந்துரு எவ்வளவோ சைகைகள் செய்தும் அவனுக்கு உட்காரும் தைரியம் வரவில்லை. அதற்குத் தகுந்தாற்போல அவருடைய குரலே கம்பீரமாக இருந்தது. அவர் பார்ப்பதே ராஜ பார்வை மாதிரி இருந்தது. பெரிய கண்கள்; பெரிய விழிகள். மணியைக் கண்டதும் அவர் தம் மனைவியின் பக்கம் திரும்பி, ''இதெல்லாம் என்ன?'' என்பதுபோலப் பார்த்தார்.

அந்த அம்மாள் ஒன்றும் சொல்லவில்லை, பயப்பட்டதாகவும் காட்டிக்கொள்ளவில்லை. வஸந்தியைப் பார்த்து, ''இந்தா, வந்ததும் வராததுமாய் இது என்ன தொந்தரவு செய்கிறாய், அப்பாவைப் போய்! இந்தண்டே வா!'' என்று அதட்டினாள்.

சந்துரு அப்பாவுக்கு எதிர்த்தாற்போல் அதிகமாக நிற்கமாட்டான் என்று தெரிந்தது. பயம், மரியாதை இரண்டும் கலந்த நிலையில் அவன் ஓரமாகவே எதையோ பார்ப்பதுபோலவும் எடுப்பது போலவும் நின்றுகொண்டிருந்தான். பார்த்த மாத்திரத்திலேயே அப்பாவும் பெண்ணும் ஒரு கட்சி என்பது மணிக்குத் தெரிந்தது. அந்தப் பெண்ணுக்குத்தான் எத்தனை சலுகை!

ஒரு தோல் பெட்டி நிறைய அவர் அவளுக்கு வேண்டிய துணிமணிகளும், புதுவகை விளையாட்டுச் சாமான்களும் வாங்கி வந்திருந்தார். அதிலே ஒரு நிஜ ஸ்கை மாஸ்டர் விமானம் இருந்தது. சாவி கொடுத்துவிட்டால் அது கொஞ்சதூரம் தரையிலே ஓடி

உயரப் பறக்க ஆரம்பிக்கிறது. இரண்டு ரவுண்டு சுற்றிவிட்டு அது கீழே இறங்கித் தரையில் ஓடுகிறது. பல கிளைகள் போட்ட ரெயில்வே லைன்களும் எஞ்சினும் வந்திருந்தன. காசு விழுங்கும் யானை, மலாயாப் பொம்மை, ரேஸ் ஓடும் குதிரைகள் எல்லாம் புதுமையாக இருந்தன. அப்பா பெண்ணுக்கு ஒவ்வொன்றாக விளக்கிக்கொண்டேயிருந்தார். மலாயா பொம்மைக்கு முன்புறம் உருண்டையாக ஒரு குழாய் இருந்தது. அதிலே மஞ்சள் வர்ணத்தில் ஸ்பிரிட் இருந்தது. அதைக் கையால் தொட்டால் போதும்; அப்படியே அது குழாய் வழியாகப் பின்புறம் உள்ள உருண்டைக்குப் போய் விடுகிறது. பார்த்தால் மந்திரவித்தை போலத்தான் அது இருந்தது. வஸந்தி அதைப் பார்த்து விட்டுத் துள்ளித் துள்ளிக் குதித்தாள். ஆனந்தப் பட்டாள். அவளுடைய ஆனந்தத்தைப் பார்த்து அவளுடைய அப்பாவும் சந்தோஷப் பட்டார்.

அம்மாள் அவரைச் சாப்பிட அழைத்தாள். நல்ல வேளையாக அவர் மணியைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் திடீரென்று நினைவு வரவே, "ஆமாம்; அந்தப் பையன் யாரு? வஸந்தி என்னமோ சொன்னாளே, மயக்கம் போட்டு விழுந்தான் என்று, யார் அவன்?" என்று கேட்டார்.

அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் முதலில் அம்மா விழித்தாள். பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "தெரிந்த பையன்; என்னைப் பார்க்க வந்தான்; அப்படியே மயக்கம்போட்டு விழுந்து விட்டான். இதைப் பெரிசாக உங்களிடம் வந்ததும் வராததுமாகச் சொல்கிறாள், குழந்தை" என்று நடந்ததையே வேண்டிய அளவு மட்டும் சொன்னாள்.

"மயக்கம் போடுவானேன்?"

"வெயிலிலே வந்திருக்கான். களைப்பினாலே மயக்கம் போட்டுடுத்து.

"இப்ப தேவலையா?"

"தேவலை. உடனே போக வேண்டாம். நாளைக்குப் பாத்துண்டு போகலாம்னு அதனாலேதான் அனுப்பல்லே!"

"போக வேண்டாம்னு அவா வீட்டுக்குத் தெரியுமா?"

"அவன் வீடு இங்கே இல்லே. அதனாலே அந்தக் கவலையில்லை" என்றான் சந்துரு நடுவில் வந்து.

அவனுடைய அப்பா முதலில் அவ்வளவு சிரத்தையாக இல்லை. இருந்தால் அம்மாவை விட்டிருக்க மாட்டார். மணியினுடைய நல்ல காலம். அவர் வேறே ஏதோ கவனமாகப் போய்விட்டார். சாப்பிட்ட பிறகு அவர் மாடிக்குப் போய் விட்டதால் கீழே மணி நிம்மதியாக இருந்தான்.

சந்துருவும் அவன் அம்மாவும் சந்தோஷப் பட்டார்கள், மணிக்கு இரண்டு நாட்களுக்குள் ஏதாவது ஒரு வழி செய்யவேண்டும் என்று சந்துரு எண்ணினான். அவனுடைய அம்மாவுக்கும் அப்படித் தான் இருந்தது. 'பாவம், தாயில்லாப் பிள்ளை! பாவம், தாயில்லாப் பிள்ளை!' என்று வார்த்தைக்கு வார்த்தை சொன்னாள்.

அவனைப் பாலர் பவனத்தில் சேர்ப்பதா, வேறு எங்கேயாவது படிக்கச் சொல்வதா, அல்லது வீட்டு வேலை செய்யும்படி விடுவதா என்று ஒன்றும் அவர்களுக்குப் புரியவில்லை. மணியோ அவர்கள் விட்ட வழிதான் தனக்கு என்று பங்களாவின் கார் ஷெட்டுக்கு அருகில் இருந்த அறையில் தங்கியிருந்தான். ஒழிந்த நேரத்தில் கார் டிரைவர் கண்ணப்பனிடம் பேசிக்கொண்டிருந்தான். கார் டிரைவர் கண்ணப்பன் மிகவும் நல்ல சுபாவமுள்ளவன் என்று தெரிந்தது. முதலில் தன்னுடைய தலையணையைக் கொடுத்தவன் அவன் என்பது அதைத் திருப்பிக் கொடுக்கும்போது மணி தெரிந்து கொண்டான்.

சந்துருவின் அப்பா சர்க்காரில் பெரிய உத்தியோகஸ்தர் என்பதை டிரைவர் சொல்லித்தான் தெரிந்து கொண்டான்.

''ஐயா வந்து நல்ல மனுசன் தான்; ஆனால் கண்டிப்பான பேர் வழி. அம்மா அப்படியில்லே: அவர்களுக்கு ஈவு இரக்கம் சாஸ்தி. சந்துருவும் அம்மாளைப் போல. அந்தப் பெண்ணு இருக்கு பாரு! ஐயோ! குணத்திலே அவங்க அப்பாருதான். நாக்குணம். ஒருத்தருக்குக் கிள்ளித் தெறிக்காது. எல்லாம் தனக்குத்தான்!'' என்றான் கண்ணப்பன்.

மணி எல்லாவற்றையும் 'உம் உம்' என்று கேட்டுக்கொண்டிருந்தான். அவனிடம், அம்மாளிடம் சொன்னது போலவே தன் கதையை யெல்லாம் ஒரு முறை சொன்னான். சிறிது நேரத்திலேயே அவனும் டிரைவரும் அந்நியோந்நியமாகிவிட்டார்கள். கண்ணப்பன் அந்த வீட்டில் பல வருஷங்களாக டிரைவராக இருக்கிறான். அவனும் சிறு வயசில் இப்படிக் கஷ்டப்பட்டவன்தான். எப்படியோ கஷ்டப்பட்டு மோட்டார் ஓட்டக் கற்றுக்கொண்டான். அதற்குப் பிறகு இத்தனை வருஷங்களாக அவன் தன் வேலை உண்டு, தான் உண்டு என்று இருந்து வந்திருக்கிறான். அந்த வீட்டுக்காரர்களுடைய குண தோஷங்களைப்பற்றி அவன் கவலைப் படுவதாகவே தெரியவில்லை. மணிக்கு அவனை மிகவும் பிடித்துப் போய்விட்டது. தன் கவலையை யெல்லாம் மனம்விட்டுச் சொல்லிக்கொள்ளத் தொடங்கி விட்டான்.

அன்று இரவு சந்துரு வந்து, ''மணி! சாப்பிட்டியா? நீ என்ன செய்யலாம்னு நினைக்கிறே? இங்கேயோ ரொம்ப நாள் இருக்க முடியாது. ஏதாவது ஒரு யோசனை சொல்லு. அதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம்'' என்றான்.

''எனக்கு ஒண்ணும் தோணவியே! பாலர் பவனத்திலே சேரலாமா?'' என்றான் மணி.

''இப்போ வருஷ நடுவிலே சேர முடியாதாம். ஆரம்பமாய் இருந்தா எங்க அம்மாவே உன்னைக் கொண்டு போய்ச் சேர்த்திருப்பாளே! அதையும் தவிர அதுக்குப் பணம் கட்டணும். தெரியுமோ? மாசத்துக்கு இவ்வளவுன்னு ஒரு கணக்கு உண்டு. இனுமாச் சேர்த்துக்க மாட்டா!'' என்றான்.

''எங்கேயானும் வேலைக்கு ஒரு அட்டெண்டர் மாதிரி ஏற்பாடு பண்ணினா என்ன தம்பி?'' என்றான் கண்ணப்பன்.

''பண்ணலாம்! படிக்கிற வயசு. வேறே வழியில்லேன்னா அப்படியே செய்ய வேண்டியதுதான்!'' என்று சொல்லிவிட்டுப் போனான் சந்துரு.

''சும்மா உட்கார்ந்திருக்கிறயே. போய் ஊரைச் சுத்திப் பாத்துட்டு வாயேன்?'' என்றான் கண்ணப்பன் மறுநாள் காலை.

சரிதான் என்று புறப்பட்டான் மணி. எதிரே அந்தப் பெண் வஸந்தி, ''ஏண்டா பையா? இரண்டு நாளா இங்கேயே இருக்கியே. எப்போ உங்க வீட்டுக்குப் போகப் போறே?'' என்றாள்.

மணி தயங்கினான். பதில் சொல்லாமல் முடியுமா? ''போவேன், போவேன். உங்க அம்மா சொன்னவுடனே போவேன்'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

அவன் வீடு திரும்பும்போது மணி ஏழரையாகிவிட்டது. வாசலில் ஏதோ கூச்சல் கேட்டது. சந்துருவின் அப்பா டிரைவர் கண்ணப்பனைக் கூப்பிட்டு ஏதோ இரைச்சல் போட்டுக்கொண்டிருந்தார்.

மணி உள்ளே நுழைவதா என்று தயங்கித் தயங்கி வரும்போது, ''அப்பா! அதோ அந்தப் பையனே வந்துட்டான்! அவன் தான் அப்பா!'' என்று வஸந்தி சொல்லிக் கொண்டிருந்தாள். மணி புலியைக் கண்ட ஆடு போல நடுங்கினான்.

(தொடரும்)




# கிறிஸ்டல் ரேடியோ

**ஈ. ஜி. என்.**

அன்று ராஜனுக்கு விடுமுறை நாள். பொழுது போகவில்லை. ஆகவே அவன் தன் நண்பன் ராமுவின் வீட்டுக்குக் கிளம்பினான். அவன் போன சமயம் ராமு ஒரு டெலிபோன் ஒலிக் கருவியைக் (Ear-piece) காதில் வைத்துக்கொண்டு எதையோ கேட்டுக்கொண்டிருந்தான். ராஜனைக் கண்டதும் அவன், அந்த ஒலிக் கருவியை எடுத்து ராஜனுடைய காதில் வைத்தான். அதிலிருந்து மெல்லிய குரலில் உள்ளூர் ரேடியோ நிலையத்தில் ஒலி பரப்பப்படும் பாட்டு கேட்டுக்கொண்டிருந்தது. அது ராஜனுக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. அது வேலை செய்யும் விதத்தை ராமுவிடம் கேட்டான். ராமுவுக்கும் அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவன் அண்ணன் அந்தக் கருவியைச் செய்து வைத்திருந்தான். இந்தக் கருவி வேலை செய்யும் விதத்தைத் தெரிந்துகொள்ள அவர்கள் இருவரும் ராஜனுடைய மாமாவின் வீட்டிற்குப் புறப்பட்டார்கள்.

ராஜன் மெதுவாகக் கிறிஸ்டல் ரேடியோ விஷயத்தை ஆரம்பித்தான். அதன் தத்துவத்தையும், செய்யும் முறையையும் அவனுடைய மாமா அவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு விவரித்தார்:

இந்த வகை ரேடியோக்கள் சில இடங்களில்தான் வேலை செய்யும். அதாவது ஒலி பரப்பு நிலையங்கள் (Broadcasting Station) உள்ள இடங்களைச் சுற்றிச் சுமார் 10 அல்லது 15 மைல்களுக்கு மேல் இவைகள் வேலை செய்யா. இந்த ரேடியோக்களுக்கு மின்சாரம் தேவையில்லை. ஒலி பரப்பு நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படும் மின்சாரத்தினால் இது வேலை செய்கிறது. ஆகவேதான் அதிக தூரங்களில் இந்த ரேடியோ பயன்படுவதில்லை. இந்தக் கருவியில் உள்ள பாகங்களில் முறையே கிறிஸ்டல் (Crystal), ஒலி ஏற்கும் கம்பிச் சுருள்

(Induction Coil), காதொலிக் கருவி (Ear-phones) ஆகிய மூன்றும் மிக முக்கியமானவை. கிறிஸ்டல் என்பது சில தாதுப் பொருள்களால் அமைக்கப்பட்டது. இதில் பல வகைகள் உள்ளன. ஈயத் தாது (Galena) கார்போரண்டம் (Carborandam) போன்ற பல்வேறு கிறிஸ்டல்கள் உபயோகத்தில் உள்ளன. சாதாரணமாக உபயோகத்திலிருப்பது ஈயத் தாது (Galena) கிறிஸ்டல்கள்தான். இவை நாட்டு மருந்துக் கடைகளில் 'சுருமாக்கல்' என்ற பெயருடன் மருந்துச் சாமானுகவிற்கப்படுகிறது. இதைப் பொருத்தி வைக்கும் முறைகளை, இந்தப் படங்களில் பாருங்கள். படம் 1-உம் 3-உம் தகரத்தை வளைத்து அதில் நிறுத்தப்பட்ட கிறிஸ்டல்கள். 2-ஆவது படத்திலுள்ளது ஸைக்கிள் ட்யூப்பிலிருந்து எடுக்கப்பட்ட உலோகக் குழாய். இதன் முனையில் கிறிஸ்டல் பொருத்தப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். தவிர ரேடியோக் கம்பெனிகளில் இந்தக் கிறிஸ்டல்களைக் கண்ணுடிக் குழாய்களில் பொருத்தி விற்பனை செய்கிருர்கள். படம் 4 அந்த மாதிரி ஒரு வகைக் கிறிஸ்டலைக் காட்டுகிறது.

அடுத்தபடியாக ஒலி அலைகளை ஏற்கும் கம்பிச் சுருள் (Induction Coil). இதைத் தயார் செய்யும் முறையே படம் 5. சுமார் $1\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவும் 3 அங்குலம் நீளமுமுள்ள உருண்டையான ஒரு கட்டையினுல் இது செய்யப்பட்டிருக்கிறது. ஓரங்களில் சுமார் கால் அங்குல நீளம் விட்டு நடுப் பாகத்தில் 28 S. W. G.* கம்பியை வரிசையாகவும் நெருக்கமாகவும் சுற்றப்பட்டிருக்கிறது. கம்பியின் ஒரு முனையில் வார்னிஷை அகற்றிவிட்டிருக்கிருர்கள். மற்ருெரு முனையைக் கட்டையோடு ஆணியினுல் பதித்து விடுகிருர்கள். கம்பிச் சுருளின் ஓரங்களில் இரண்டு ஆணிகளை நிறுத்தி (N) அவற்றின் மேல் ஒரு கனமுள்ள இரும்புக் கம்பியைப் பொருத்தியிருக்கிருர்கள். இந்தக் கம்பியில் நகரக் கூடிய ஒரு தகரத் துண்டு (S) பொருத்தப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். இந்தத் தகரத் துண்டு கம்பிச்

* கடைகளில் கிடைக்கும்.



7



6

சுருளின் மேல் உராயுமிடங்களில் வார்னிஷ் அகற்றப்பட் டிருக்கிறது. இந்தத் தகரத்துடன் ஒரு கம்பி பொருத்தப்பட்டிருக்கிறது.

அடுத்தது காதொலிக் கருவி (Earphones) என்பது. இது ரேடியோக் கம்பெனிகளில் விற்பனை செய்யப்படுகிறது. இதன் தத்துவத்தைத் தனியே ஒரு முறை கூறுகிறேன். இந்த மூன்றைத் தவிர கிறிஸ்டலின் மேல் தொடும் கம்பி (Cat whisker) ஒன்று இதோ காண்பிக்கப்பட்டிருக்கிறது. படம். 6. இது சாதாரணத் தாமிரக் கம்பியால் செய்யப்பட்டது. கம்பியைத் தகரத் தகட்டின் உதவியால் நிறுத்தி வைக்கப்பட் டிருக்கிறது.

இப்பொழுது முன் சொன்ன பாகங்களைச் சேர்த்து ரேடியோ செட்டாகச் செய்யும் விவரத்தைப் படம் 7-இல் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

A என்று குறிப்பிடப்பட்டிருப்பது அலைகளைப் பெறும் கம்பி (Aerial) யைப் பொருத்த வேண்டிய இடம். E என்று குறிப்பிடப்பட்டிருப்பது பூமியிலிருந்து (Earth) கொண்டு வரப்படும் கம்பியைப் பொருத்த வேண்டிய இடம். A என்ற பகுதியிலிருந்து ஒரு கம்பி, கம்பிச் சுருளிலுள்ள நகரும் தகரத்தில் (Sliding Contact) பொருத்தப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அதிலிருந்து மற்றொரு முனை கிறிஸ்டலுடன் பொருத்தப்பட்டிருக்கிறது. E என்ற பாகத்திலிருந்து ஒரு கம்பிச் சுருளின் முனையுடன் சேர்க்கப்பட்டு, பிறகு அதிலிருந்து காதொலிக் கருவியின் ஒரு முனையோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. காதொலிக் கருவியின் மறு முனை கிறிஸ்டலைத் தொட்டுக்கொண் டிருக்கும் கம்பியுடன் பிணைக்கப்பட் டிருக்கிறது. இந்த ரேடியோவின் பாகங்கள் இவைதான்.

சுமார் 15 அடி உயரத்தில் கட்டப்பட் டிருக்கும் அலைகளைப் பெறும் கம்பியிலிருந்து (Aerial) ஒரு நீண்ட கம்பி ரேடியோவின் A என்ற பகுதியில் பிணைக்கப்பட வேண்டும். பின்பு E என்ற பகுதியிலிருந்து ஒரு நீண்ட கம்பியைப் பிணைத்து அதைத் தண்ணீர்க் குழாயிலோ (Tap) அல்லது ஆழமாகப் புதைக்கப் பெற்ற இரும்புக் கம்பியிலோ பொருத்திவிடவேண்டும். இப்பொழுது காதொலிக் கருவியைக் காதில் பொருத்திக்கொண்டு, கிறிஸ்டலின் மேல் தொட்டுக்கொண்டிருக்கும் கம்பியை மெதுவாக நகர்த்தினால் ஏதாவதொரு இடத்தில் ஒலி கேட்கும். இந்தச் சப்தம் மிகவும் மெல்லியதாக இருந்தால் கம்பிச் சுருள்களின் மேலிருக்கும் தகரத் துண்டை முன்னும் பின்னுமாக நகர்த்தி, ஒலி அதிகமாகக் கேட்கும் சமயம் அந்த இடத்தில் அதை நிறுத்தி விடவேண்டும். இந்த வகையில் சத்தம் நன்றாகக் கேட்டுக்கொண் டிருக்கும் பொழுது கிறிஸ்டலின் மேலிருக்கும் கம்பி லேசாக நகர்ந்து விட்டாலும் ஒன்றும் கேட்காமல் போய்விடும். அதனால் இம்மாதிரியான கிறிஸ்டலைப் பொருத்துவதைவிடக் கம்பெனி

8

களில் விற்கும் நீலக் கிறிஸ்டல் (Fixed Crystals) களை (படம்-8) வாங்கிப் பொருத்தி விடுதல் சிறந்தது.

இந்த வகை ரேடியோக்களுக்கும் சர்க்கார் அனுமதி (Licence) தேவை.

# நாயுடுவின் படம்

சங்கரசுப்பு

அடையாற்றில் 'பூங்காவனம்' என்ருெரு பிரம்மாண்டமான பங்களா. அதைச் சுற்றி பெரிய தோட்டம். தோட்டத்தை அணைத்தாற்போல் மதிற் சுவர் வட்டமாக ஓடியிருந்தது. பங்களாவின் வாசலை அடைந்ததும் காரை நிறுத்திவிட்டு, தம்புடு காரினின்று இறங்கினுர். நானும் அவரைப் பின்தொடர்ந்தேன். நாற்பது வயது மதிக்கத் தக்க ஒருவர் பரபரப்புடன் ஓடிவந்து எங்களை எதிர்கொண்டழைத்தார்.

தம்புடு, ''இவர் என் நண்பர். ஒரு தினசரியில் உதவி ஆசிரியர்'' என்று என்னை அவருக்கு அறிமுகம் செய்துவிட்டு, ''இவர்தான் 'ஹாபி' அனந்தசயன நாயுடு காரு. மல்டி மில்லினர்'' என்று லேசாகச் சிரித்துக்கொண்டே என்னிடம் சொன்னுர்.

நாங்கள் உள்ளே சென்று நாற்காலிகளில் உட்கார்ந்தோம்.

''ஸார், மிஸ்டர் தம்புடு! நான் ஒரு பெரிய படப் பைத்தியம் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். நான் சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்தேன். அப்போது அங்கே விலைக்கு, ஐந்தாறு லட்சம் பெறுமான வர்ணப்படங்கள் வாங்கிவந்தேன். அவைகளில் ஒன்று எழுபத்தைந்தாயிரம் ரூபாய் விலையுள்ளது. அந்தப் படத்தை நான் வாங்கினவுடனேயே ஒரு பெரிய தனவந்தர் ஒன்றரை லட்ச ரூபாய்க்குக் கேட்டார். நான் மறுத்துவிட்டேன். அவ்வளவு பிரமாதமான படம். ஆயில் பெயிண்டில் வரைந்தது. ஒரு தாய் சிசுவுக்குப் பால் கொடுக்கிருள். இதுதான். ஆனுல் அப்படியே எதிரில் உட்கார்ந்திருப்பதுபோல் எத்தனை தத்ரூபமாக வரையப்பட்டிருந்தது! பால் சாப்பிடும்போது குழந்தை இடும், 'சப், சப்' என்று சப்தம் கேட்குமே, அந்தச் சப்தம் கூடக் கேட்பதாகப் பிரமை தட்டும். அவ்வளவு அழகானது. அந்தப் படத்தை என் வீட்டு மாடி அறையில் மாட்டி வைத்திருந்தேன். அதைக் காணவில்லை, ஸார்! நீங்கள்தான் தயை பண்ணி....''

''ஆமாம், படத்தை எந்த அறையில் மாட்டிவைத்திருந்தீர்கள்?''

''இதோ இந்த அறையில்தான்'' என்று நாயுடு எங்களை மாடி ஹாலுக்கு அழைத்துப் போய்க் காட்டினுர்.

தம்புடு ஹாலின் நாலுபுறத்தையும், கண்ணுல் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு, ''சில தினங்களுக்கு முன்தான் வெள்ளை அடித்திருக்கிறீர்கள் போலிருக்கிறது, ஏன் நாயுடுகாரு?'' என்று கேட்டுக்கொண்டே, ஒரு படத்தைத் தூக்கி அதனடியில் பார்த்தார். ''படங்கள் சகலமும் கழற்றி வைக்கப்பட்ட பின்தான் வெள்ளை அடிக்கப்பட்டதா?'' என்ருர்.

''ஆமாம், ஸார்! உங்களுக்கு எப்படித் தெரிந்தது? ஆ ஹா! நீங்கள் துப்பறியும் நிபுணராயிற்றே! உங்களுக்குத் தெரியாததா? மன்னிக்கவேண்டும்.''

''ஆமாம், படம் எவ்விடத்தில் மாட்டப்பட்டிருந்தது?''

''இதோ இந்த இடத்தில்தான்'' என்று நாயுடுகாரு ஒரு வெறும் சட்டத்தைச் சுட்டிக் காண்பித்தார்.

தம்புடு சட்டத்தை நன்ருக உற்றுக் கவனித்தார். சட்டத்தின் ஒரு மூலையில் படம் வரையப்பட்டிருந்த கித்தானின் ஒரு துண்டு இருந்தது.

''ஆமாம், சித்திரம் எப்போது காணுமல் போயிற்று?''

''நேற்றுதான், ஸார்!''

''இந்த அறைக்குள் யார், யார் அடிக்கடி வருகிருர்கள்?''

''என்னைத் தவிர என் மூன்று

வேலையாட்கள்தான் இந்த அறைக்குள் நுழைவது வழக்கம்.''

வேறு ஒருவருமில்லையா..?''

நாயுடுகாரு தம் நெற்றிப் புருவத்தை விரல்களினால் நெருடினார்.

''ஸார்! உங்களிடம் சொல்ல மறந்து விட்டேன். எனக்கு ஒரு நண்பர் உண்டு. புதிதாகப் பரிசயமானவர். அவர் இந்த அறைக்குப் பன்முறை வந்திருக்கிறார்.''

''யார், அது?'' என்றார் தம்புடு.

''நியூயார்க்கிலிருந்து வந்திருக்கிறார். பெயர் ஜான்சன் என்பது. பெரிய சித்திரகாரர். தமிழ் தெரியாது. ஆங்கிலம் பேசுவார். உலகத்தையே சுற்றிப் பார்த்திருக்கிறாராம். பற்பல சித்திரங்கள் வரைந்திருக்கிறார். ஐந்து ஆறு நாட்கள் முன்பு என்னைப் பார்க்க வந்தார். இங்கே அவரை அழைத்து வந்து சகலவிதமான சித்திரங்களையும் காண்பித்தேன். ஒவ்வொன்றையும் பார்த்து வியந்தார். இப்போது தொலைந்து போயுள்ளதே அதையும் காண்பித்தேன். அதைப் பார்த்தவர் ஆச்சரியம் மிக அடைந்து போய், 'அடேடே! கடைசியில் நீங்கள் வாங்கிக் கொண்டு வந்துவிட்டீர்களா? இந்தப் படத்தை நான் அமெரிக்காவிலேயே பார்த்திருக்கிறேன். நானே இதை வாங்க வேண்டுமென்றிருந்தேன். அப்போது என்னிடம் பணம் இல்லை. ஆமாம், எவ்வளவு கொடுத்தீர்கள்?' என்று கேட்டார். 'எழுபத்தைந்தாயிரம் ரூபாய்' என்றேன் நான். 'பேஷ்! அதிருஷ்டசாலி, ஐயா, நீர்! எழுபத்தைந்தாயிரம் என்ன, லட்சம்கூடக் கொடுக்கலாமே இந்தப் படத்திற்கு. படம் என்றால் இதுவல்லவா படம்; ஆஹா! என்ன உயிர்! அப்படியே கலை சொட்டுகிறதே, ஜீவன் ததும்புகிறதே!' என்றெல்லாம் வர்ணித்தார்.

''பிறகு 'வாட்டர் கலரி'ல் வரையப்பட்டிருந்த ஒரு ஓவியத்தைக் காண்பித்தேன். மாலைச் சூரியன் மலை வாயிலில் விழும் காட்சி வரையப்பட்டிருந்தது; இயற்கையாய், தேஜோமயமாய் மாலையில் மயங்கிவிடும்படி பிரமாதமான கவனத்துடன் ஓவியன் வரைந்திருந்தான். இதோ இதுதான் அது'' என்று ஒரு படத்தைக் காட்டினார்.

ஹாபி அனந்தசயன நாயுடு தொடர்ந்தார். ''இந்தப் படத்தைப் பார்த்ததும் அந்த அமெரிக்க நண்பர் குதித்தார். 'மலை முன் ஓடும் நதியை அப்படியே இரு கைகளாலும் அள்ளிப் பருகலாமா என்று தோன்றவில்லை? சல சலவென ஓடுகிறது போலில்லை? நதிக்கரையில் ஆடும் மரங்களில் அப்படியே உயிர் துடிக்கவில்லை?' என்று வியந்து அந்தப் படத்தைப் பல தடவை ரசித்தார்.

''கடைசியில் நண்பர் சொன்னார்: 'இந்தப் படத்தை விலைக்குக் கேட்பது நன்றாயிராது, நியாயமும் இல்லை. இதை அப்படியே பார்த்து நான் ஒரு பிரதி எடுத்துக் கொள்ள வேண்டும். தாங்கள் சம்மதிப்பீர்களா! மூன்றே நாட்களில் முடித்துவிடுவேன்?'' என்றார். 'பூ! இதுதானா! அதற்கென்ன! சௌகரியம்போல் என் வீட்டுக்கே வந்து படத்தை வரைந்துகொண்டு போங்கள்' என்றேன். அவர் நன்றியோடு இங்கே வந்து சித்திரம் வரையத் தொடங்கினார்.

''மூன்று நாட்களில் என் 'வாட்டர் கலர்' சித்திரத்தைப் பார்த்து நன்றாக ஒரு பிரதி வரைந்திருந்தார். என் படம் சிறியது. அதைப் பார்த்துப் பெரிய அளவில் வரைந்திருந்தார். இல்லையெனில் என் படம் எது என்று கண்டு கொள்ளவே முடியாது.. அவ்வளவு திறம்பட சித்திரத்தைத் தத்ரூபமாக எழுதியிருந்தார்.

''பிறகு . என்னிடம் விடை பெற்றுக்கொண்டு அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்று விட்டார்.

''நேற்று இந்த அறையை வெள்ளையடிக்கப் படங்களைக் கழற்றி வைத்தோம். அப்போது தான் சுவரில் அறையப்பட்டிருந்த எழுபத்தைந்தாயிரம் ரூபாய் போட்டு நான் வாங்கி வந்த படம் காணாதது தெரியவந்தது. இதோ, இந்த வெறும் சட்டம்தான் சுவரில் இருந்தது'' என்று நாயுடுகாரு முடித்தார்.

''சமி, வாருங்கள் கீழே போவோம்'' என்று தம்புடு கூறவே மாடியினின்று நாங்கள் மூவரும் கீழே இறங்கி வந்தோம்.

''வேலைக்காரர்கள் யார் பேரிலாவது உங்களுக்குச் சந்தேகம் உண்டா?''

''நோ. நோ! நாணயமான வேலை ஆட்கள்!''

''உங்கள் நண்பர் ஜான்சனே?''

''ஸார்! ரொம்பத் தங்கமான மனுஷ்யர். நீங்கள் அவர்மீது சந்தேகித்தால்கூட நான் ஆக்ஷேபிப்பேன்.''

திடீரென்று, வாசலில் 'டப், டப்' என்று மோட்டார் சைக்கிள் சப்தம்.

சிறிது நேரத்தில் இன்ஸ்பெக்டர் சுவாமி உள்ளே வந்தார்.

''வாருங்கள், வாருங்கள்'' என்றார் நாயுடு.

''அடேடே! தம்புடுவா!? 'ஜர்னலிஸ்ட்' சுப்புவா? பேஷ்!'' என்றார் இன்ஸ்பெக்டர் சுவாமி.

''ஆமாம், திருட்டை அதுக்குள்ளேயும் நீர் கண்டு பிடித்திருப்பீரே! 'எம்டன்'னு நீர்!''

''இன்னும் 'க்ளு' கூட எதுவும் கிடைக்கவில்லை.''

''வீடெல்லாம் தேடியாச்சா? வீட்டு வேலைக்காரங்க எல்லோ ரையும் விசாரிச்சாச்சா?''

''நான் போய் மாடியிலே பார்த்துட்டு வறேன். துப்பு ஏதாவது கிடைக்கறதான்னு பார்க்கறேன்'' என்று இன்ஸ்பெக்டர் எழுந்தார்.

மறுபடி நாங்கள் எல்லோருமாக மாடிக்குச் சென்றோம்.

சுவாமி அறையிலிருந்த மூலை முடுக்குகளையெல்லாம் ஆராய்ந்து தேடினார். சற்றுப் பொறுத்து இன்ஸ்பெக்டர் சுவாமி அறையின் வெளி வராந்தாவிலிருந்து கையில் ஒரு சுருட்டின காகிதத்தோடு வந்தார். அவர் முகத்தில் பெருமிதம் கூடியிருந்தது.

''இது உங்கள் வேலையாள் ஒருவன் பெட்டியில் இருந்தது.''

''என்னங்க இது!'' என்று ஆச்சரியப்பட்டார் நாயுடு.

''பாவம்! தம்புடு இப்போது தான் முதல் முதலாகத் தோல்வி அடைந்து விட்டார். என்னை மன்னியுங்கள், தம்புடு'' என்றார் சுவாமி கேலியாக.

''மிஸ்டர் நாயுடு, படத்தை இப்படிக் கொடுங்கள்'' என்று படத்தை வாங்கி உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தார் தம்புடு.

பிறகு, ''நாயுடு, நன்றாகப் பாருங்கள். இதுவேதான் உங்கள் படமா? உற்றுப் பாரும்'' என்றார்.

''எனக்கு என் படம் தெரியாதா? நிச்சயமாய் இது என்னுடையது தான். தொலைந்து போன என் படம் இதுதான்.''

''ஆமாம், உங்கள் அமெரிக்க நண்பர் ஜான்சன் எங்கே தங்கியிருக்கிறார்?''

''தியசாபிக் லாட்ஜில்; அவர் அறை நெம்பர் 77. இரண்டாம் மாடியில் வலதுகைப் பக்க வரிசையில் மூன்றாவது அறை.''

''சரி நான் வருகிறேன். தங்களை மறுபடி நாலு மணி சுமாருக்குச் சந்திக்கிறேன்'' என்று தம்புடு எழுந்தார்.

நானும் உடன் எழுந்தேன்.

''எல்லாம் சில மணி நேரத்தில். என்னிடம் சற்று முன் ஒப்படைத்த தோல்வியை உம்மிடமே திரும்பச் சேர்க்கிறேன்'' என்று சுவாமியிடம் சொன்னார் தம்புடு.

''நீர் என்னையா புரளி பண்ணுகிறீர்! படம்தான் கிடைத்து விட்டதே!''

''போலீஸ் இலாகாவிலே இருந்தா ஆச்சுதா? நான்தான் சொல்கிறேனே, நாலு மணி சுமாருக்கு இங்கே வாரும். தம்புடு யார்னு தெரிஞ்சுப்பீர்.''

நானும் தம்புடுவும், நாயுடுவிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினோம்.

* * *

தம்புடு நேரே 'தியசாபிக் லாட்ஜு'க்குச் சென்று அமெரிக்கர் இருந்த அறையின் கதவைத் தட்டினார்.

வழுக்கை மண்டையுடன், 'பிரேம்' இல்லாத கண்ணாடி மூக்கில் துலங்க ஓர் அமெரிக்கர் கதவைத் திறந்து உபசரித்தார்.

தம்புடு நாற்காலியில் உட்காரும் போதே அந்த அறையைச் சுற்றி ஒரு நோட்டம் பார்த்தார்.

தம்புடு மெதுவாக நாயுடுவின் படம் தொலைந்து போனதைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

''ஆமாம், ஸார்! எனக்குக்கூட மிக வருத்தம். நாயுடு கலைக்குத் தம் உயிரையே அர்ப்பணம் செய்யக் காத்திருப்பவர். பாவம்!'' என்று அவரும் வருத்தத்துடன் தாழ்ந்த குரலில் சொன்னார்.

கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டுக் கதவைத் திறந்ததும் சுவாமிதான் உள்ளே நுழைந்தார்.

நாற்காலியில் உட்கார்ந்து கொண்ட சுவாமியிடம், ''மிஸ்டர் சுவாமி, இதோ பார்த்தீர்களா, இந்தப் படத்தை! எவ்வளவு நன்றாயிருக்கிறது. இதை ஜான்சனே தம் கையால் வரைந்திருக்கிறார். நாயுடு வைத்திருக்கும் ஒரு சிறிய படத்திலிருந்து இவர் பெரிதாக எழுதியிருக்கிறார். அந்தச் சித்திரம் தன்னுள் எவ்வளவு பெரிய பொக்கிஷத்தை அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறது, தெரியுமா? பொக்கிஷம் என்றால் சல்லிசாக நினைத்துவிடாதீர்கள், உமக்கு அதன் மதிப்புத்

தெரியாது. இதோ இருக்கிறாரே, பெரிய சித்திர நிபுணர்; இவருக்குத் தெரியும் அந்தச் சட்டத்திலுள்ள சித்திரத்தின் மகிமை'' என்று ஜான்சனைச் சுட்டிக் காட்டிக்கொண்டே ஆங்கிலத்தில் சரளமாகப் பேசினார் தம்புடு.

நான் அந்த அமெரிக்கரைப் பார்த்தேன். அவர் ஆப்பிள் நிற நெற்றியில் சிறு சிறு துளிகளாக வேர்வை அரும்பி முத்திட்டிருந்தது.

எதிர்பாராத வண்ணம் அந்த அமெரிக்கர், ''ஸார்! என்னை மன்னித்து விடுங்கள்; குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுகிறேன். எனக்குக் கலைமீதுள்ள பற்றுதான் ஸார், என்னை நாயுடுவின் படத்தைத் திருடத் தூண்டிற்று'' என்று அழாக் குறையாகக் கூறித் தம்புடுவின் கைகளைப் பற்றிக்கொண்டார்.

சுவாமிக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்கும்தான்.

ஜான்சன் உடனே சுவரின் ஆணியில் மாட்டப் பட்டிருந்த அந்த 'வாட்டார் கலர்' படத்தை எடுத்து வந்து தம்புடுவின் கையில் கொடுத்தார். தம்புடு படத்தை வாங்கினார். படம் கை நழுவிக் கீழே விழுந்தது. படத்தின் சட்டம்

பிரிந்து கிடந்தது. சுவாமி அவசர அவசரமாகக் கீழே விழுந்த படத்தைக் குனிந்து எடுத்தார்.

ஆச்சரியம்!

இது என்ன? காலையில் நாயுடு வீட்டில் சுவாமி தேடிப் பிடித்த படம் போலவே இன்னொன்று.

நான் ஆச்சரியமுற்றேன். சுவாமியும் விழித்தார். உடனே ஜான்சனுடன் எல்லோரும் நாயுடு வீட்டிற்குப் பயணமானோம்.

படத்தைப் பார்த்ததும் நாயுடு ஸ்தம்பித்துப் போனார். காலையில் தேடி எடுத்த படத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தார். இரண்டும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக விருந்தது. ஆனால் நாயுடு தம் சொந்தப் படத்தைச் சுலபமாகக் கண்டு கொண்டார்.

''மிஸ்டர் ஜான்சன்! நல்ல ஓவியத்திறனைக் கையில் வைத்துக் கொண்டு ஏன் இந்தத் திருட்டைச் செய்தீர்கள்?'' என்றார் நாயுடு.

அந்த அமெரிக்கர் பேசினார்: ''நான் என்ன செய்வது! அமெரிக்காவில் ஒன்றரை லட்ச ரூபாய் விலைக்குக் கேட்டாரே ஒரு தனவந்தர், அவர் ஏவலில்தான் நான் இங்கு உங்கள் பின்னாலேயே தொடர்ந்து வந்தேன். அவர் லட்ச ரூபாய் தருகிறேன் என்று ஆசை காட்டினார். இது அவருடைய மனைவி வரைந்தது. அவள் இறந்துவிட்டாள். அவள் ஞாபகார்த்தமாக இதை வைத்துக் கொள்ளவேண்டும் என்று என்னை வற்புறுத்தித் தூண்டினார். என்னை மன்னியுங்கள்'' என்று கெஞ்சினார்.

சுவாமி, ஜான்சனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லச் சித்தமானார். ஆனால் நாயுடுகாரு ஜான்சனைத் தாம் மன்னித்துவிட்டதாகவும், அவரைக் கைது செய்ய வேண்டாமென்றும் சுவாமியைக் கேட்டுக்கொண்டார்.

நாயுடு எங்களுக்குச் செய்த உபசாரம் எழுதி முடியாது. பிறகு அனைவரும் வீடு திரும்பினோம்.

காரில் வந்துகொண் டிருக்கும் போது சுவாமி தம்புடுவை, ''நீங்கள் எப்படித் திருட்டைக் கண்டு பிடித்தீர்கள்?'' என்று கேட்டார்.

''சுவாமி, நாயுடு வீட்டில் தேடிக் கொடுத்தாரே ஒரு ஆயில் பெயிண்ட் படம்; அதை நன்றாகப் பார்த்தீர்களா? அந்தப் படம் வரையப்பட்டிருந்த கித்தானின் நாலு மூலையிலும் சிறிதுகூட விள்ளாமல் முழுமையாக இருந்தது. இது அசாத்தியம். ஏனெனில் படம் வைத்திருந்த சட்டத்தின் ஒரு மூலையில் கித்தானின் ஒரு சிறிய துண்டு இணைந்திருந்ததால் சட்டத்திலிருந்து கிழித்துக்கொண்டு போகப் பட்ட படத்தின் ஒரு மூலை சேதப் பட்டிருக்க வேண்டும்.

''மேலும், ஜான்சன் வரைந்திருந்த 'வாட்டர் கலர்' சித்திரத்தைப் பார்த்தீர்களா? அப்படத்தின் சட்டம் எவ்வளவு பெரியதாயிருந்தது! நாயுடுவின் ஆயில் பெயிண்ட் படத்தின் சட்ட அளவே தானிருந்தது. அதனால் நாயுடுவின் படத்தை ஜான்சன் வெளிக் கொணர்ந்திருக்க வேண்டுமானால், தான் வரைந்த வாட்டர் கலர் சித்திரத்தின் சட்டத்தினுள் வைத்துத்தான் கொண்டுவந்திருக்க வேண்டும். ஏன், அவர் அந்தச் சித்திரத்தை வரையக் காரணமே, படத்தை வெளியில் கிளப்பிக் கொண்டு வரத்தானே!

''அந்த அமெரிக்கன் ரொம்பவும் கெட்டிக்காரன். மூளையை நன்றாக உபயோகித்து வேலை செய்திருக்கிறான். படத்தை நேரிடையாக வெளியே கிளப்பிக்கொண்டு வருவது அசாத்தியம் என்று தெரிந்து கொண்டுதான், தான் வரைந்த வாட்டர் கலர் சித்திரத்தின் சட்டத்தினுள் நாயுடுவின் ஆயில் பெயிண்ட் . படத்தை வைத்து அதன் மேல் வாட்டர் கலர் படத்தை வைத்துவிட்டான். இதனால் உள்ளிருக்கும் ஆயில் பெயிண்ட் சித்திரம் வெளியே தெரியாது.

''தன்மீது பழி வராமலிருக்கத் தான் நாயுடுவின் ஆயில் பெயிண்ட் படம்மாதிரி இன்னொன்று வரைந்து அதை ஒரு வேலையாள் பெட்டியில் வைத்துவிட்டான்'' என்று தம்புடு கூறி முடித்தார். இதற்குள் என் வீடு நெருங்கவே நான் இறங்கிக் கொண்டேன்.

# பெரியோரின் எளிமை

## எஸ். ஜி. கைலாஸ்

பூஜ்ய மகாத்மா காந்திஜியைப் பற்றிக் கேள்விப் படாதவர்கள், நம் நாட்டில் மாத்திரம் என்ன, உலகம் முழுவதிலுமே எவரும் இருக்க மாட்டார்கள். இத்தகைய உலகப் பிரசித்தி பெற்ற மகான் ஒரு காலத்தில் மிகச் சாதாரண மனிதராகவே இருந்து வந்தார். 1919-ஆம் வருடத்திய ஒரு நிகழ்ச்சி இது. காந்திஜியை அது வரையில் அதிகமாய் யாரும் பார்த்ததில்லை. ஆனால் அவர் பெயர் நாடெங்கும் மெள்ள மெள்ள பிரசித்தி அடைந்து வந்த காலம். ஒரு நாள் காந்திஜி பீகார் மாகாணத்திலுள்ள சம்பாரன் என்ற ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார்.

காந்திஜியும் பல தலைவர்களும் மூன்றாம் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தனர். வண்டி மோதிகாரி என்னும் ஊரை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. காந்திஜியைக் காணவேண்டுமென்று ஏராளமான மக்கள் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் கூடி இருந்தார்கள். பலர் அதே வண்டியில் மோதிகாரிக்குப் போய் காந்திஜியைத் தரிசிப்பதற்காக ஏறிக்கொண்டிருந்தார்கள். வண்டி புறப்பட இன்னும் சிறிது நேரமிருந்தது. அப்பொழுது ஒரு கிராமத்து மனிதன் வண்டியில் எங்கும் இடம் கிடைக்காமல் கடைசியில் காந்திஜி இருந்த பெட்டியில் சற்று இடமிருப்பதைக் கண்டு உள்ளே ஏறி வந்துவிட்டான்.

சற்று நேரத்தில் வண்டி புறப்பட்டுவிட்டது. பலர் நின்றுகொண்டிருந்தனர். சிலர் உட்கார்ந்திருந்தனர். காந்திஜி ஒரு பலகையில் காலை நீட்டிக்கொண்டு படுத்துக்கொண்டிருந்தார். அந்தப் பட்டிக்காட்டு

மனிதன் சற்று நேரம் பொறுத்து விட்டு மெதுவாகக் காந்திஜியின் பக்கத்தில் வந்து, ''ஏன் ஐயா. பெட்டியில் இவ்வளவு கூட்டம் இருக்கும் பொழுது நீ மாத்திரம் காலை நீட்டிக்கொண்டு படுத்திருக்கிறாயே. கொஞ்சம் எழுந்து உட்கார்ந்து கொண்டு மற்றவர்களுக்கும் இடம் கொடு'' என்று கூறிக்கொண்டே அவர் காலைப் பிடித்து இழுத்து உட்கார வைத்துவிட்டுத் தானும் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான்.

அந்த அப்பாவி மனிதனும் காந்திஜியைத் தரிசனம் செய்வதற்காகவும், அவரது சொற்பொழிவுகளைக் கேட்பதற்காகவுமே மோதிகாரிக்குப் போய்க்கொண் டிருந்தான். சற்று நேரத்திற் கெல்லாம் அவனுக்கு மிகுந்த குஷி கிளம்பிவிட்டது. எந்த மகாத்மாவைத் தரிசிக்கப் போய்க்கொண் டிருக்கிறானோ, அதே காந்தியின் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதை அந்தப் பேதை அறியவில்லை. அவன் சந்தோஷ மிகுதியால் 'பாரத நாட்டின் துன்பத்தைத் துடைக்க வந்த அண்ணல் காந்தியே' என்ற அடியைக் கொண்ட ஒரு ஹிந்திப் பாடலைப் பாடத் தொடங்கினான். பக்கத்திலுள்ளவர்க ளெல்லாம் வியப்புடன் அவனது செயலைக் கவனித்து வந்தனர்.

ரெயில் மோதிகாரி ஸ்டேஷனை வந்தடைந்தது. ஏராளமான மக்கள் காந்திஜியை மாலைகள் சூட்டி வரவேற்றனர். அப்பொழுதுதான் அந்தக் கிராமத்தானுக்குத் தான் செய்த தவறு தெரிய வந்தது. அவன் மகாத்மாஜியைத் தெரிந்து கொண்டு, தான் செய்த குற்றத்திற்காக அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினான். காந்திஜியும் மிகுந்த அன்புடன் அவனை அன்புடன் தன் மார்போடு தழுவிக் கொண்டார். உத்தமரான மகாத்மா காந்தி ஏழைப் பங்காளனும் கிராமத்து மக்களுக்காகப் பாடுபட்ட உயர் குணங்களும் படைத்தவர் அல்லவா?

* * *

**ம**கான் டால்ஸ்டாய் ஒரு தடவை சாதாரண உடையில், ரெயில்வே பிளாட்பாரத்திற்குள் உலாவிக்கொண் டிருந்தார். அப்பொழுது அங்கே வந்த ஒரு ஸ்திரீ அவரை ஒரு கூலி என்று எண்ணித் தன்னருகில் அழைத்தாள். மேலும் சொன்னாள்: ''என் கணவர் இந்தத் தெருவின் கோடியிலுள்ள ஹோட்டலில் தங்கியிருக்கிறார். இந்தக் கடிதத்தை அவரிடம் கொடுத்து விட்டு வருவாயானால் உனக்கு இரண்டு ரூபிள்கள் கூலி தருகிறேன்.''

இதைக் கேட்ட டால்ஸ்டாய் மறுமொழி ஒன்றும் பேசாமல் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு அந்த ஹோட்டலை நோக்கிச் சென்றார். கடிதத்தை அந்த ஸ்திரீயின் கணவரிடம் சேர்த்துவிட்டுத் திரும்பி வந்தார். மேலும் தனக்குக் கிடைக்க வேண்டிய இரண்டு ரூபிள்களையும் பெற்றுக்கொண்டார்.

சற்று நேரத்திற்குப் பின் டால்ஸ்டாயின் நண்பர் ஒருவர் அங்கே வந்து சேர்ந்தார். நண்பர் டால்ஸ்டாயை, 'கவுண்ட்' என அழைத்து அளவளாவத் தொடங்கினார். மேல் நாட்டில் பெருங்குடி மக்களுக்குத்தான் 'கவுண்ட்' என்னும் சொல் உபயோகிக்கப்படும். இதைக் கேட்ட மாத்திரத்தில் அவரைக் கூலி வேலைக்கு அனுப்பிய ஸ்திரீக்கு உடல் பதறத் தொடங்கிவிட்டது. தான் ஏதோ தகாத காரியம் செய்துவிட்டதாக உணர்ந்தாள். உடனே அவர்களருகில் சென்று டால்ஸ்டாயின் நண்பரிடம் அவர் யாரென விசாரித்தாள். இதைக் கேட்ட அம்மனிதன் மிகுந்த வியப்புடன், ''ஏன் இவரை நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா? இவர்தான் 'கவுண்ட்' டால்ஸ்டாய்'' என்றார். டால்ஸ்டாய் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அந்த மாது பொறி கலங்கி நிலை தடுமாறிப் போய்விட்டாள். மிகவும் பிரயாசைப்பட்டுத் தன்னைச் சமாளித்துக்கொண்டு டால்ஸ்டாயிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சொன்னாள்: ''நான் செய்த தவற்றை மன்னித்துவிடுங்கள். நான் உங்களுக்கு அளித்த இரண்டு ரூபிள்களையும் தயவு செய்து திரும்பக் கொடுத்துவிடுங்கள்.. நான் உங்களைக் கூலியென நினைத்து அவமானப்படுத்தி விட்டேன் கடவுள் என்னை மன்னிப்பாராக.''

இதைக் கேட்ட டால்ஸ்டாய் புன்னகையுடன் மொழிந்தார்: "தேவியவர்களே, உங்களை மன்னிக்கவேண்டியது பகவானுடைய பொறுப்பு. ஆனால் நான் வேலை செய்து சம்பாதித்த இரண்டு ரூபிள்களை உங்களுக்கு எதற்காகத் திரும்பத் தரவேண்டும்? நான் உழைத்துச் சம்பாதித்த பணத்தை நன்றாகக் கொடுப்பேனே!"

இவ்வார்த்தைகளைக் கேட்ட அந்த ஸ்திரீ மறுமொழி கொடுக்க முடியாமல் வாயடைத்துப் போனாள்.

* * *

**வ**ங்காள நாட்டிலே பிறந்த பண்டிட் ஈஸ்வர சந்திர வித்யாசாகரர் பாரத தேசம் முழுவதிலுமே பேரும் பெருமையும் பெற்று விளங்கினார். அறிவாற்றலினால் 'கல்விக் கடல்' என்னும் பட்டத்தையும் பெற்றார். இருப்பினும் அவர் மிக எளிய உடைகளையே அணிந்துவந்தார். ஒரு தடவை வித்யாசாகரர் கல்கத்தாவிலிருந்து பர்த்துவானுக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். இவருடனேயே ஓர் இளைஞன் ஹாட், பூட்ஸ், சூட்டு அணிந்துகொண்டு மிக மிடுக்குடன் யாத்திரை செய்து வந்தான்.

வண்டி பர்த்துவான் வந்து நின்றதும் ஈஸ்வரசந்திரர் தம் பெட்டியிலிருந்து கீழே இறங்கினார். அந்த வாலிபனும் அதே ஸ்டேஷனில் இறங்கியவுடன், "கூலி, கூலி" எனக் கூவினான். அவனிடம் ஒரு சிறு பெட்டி மாத்திரம் இருந்தது. தானே அதை எடுத்துக்கொண்டு செல்வதில் சரீர சிரமம் அதிகம் ஏற்படாது. என்றாலும் அவன் அதைக் கௌரவக் குறைவாக எண்ணினான். தற்செயலாக அந்த ஸ்டேஷனில் அப்பொழுது ஒரு கூலியும் இல்லாது போகவே, வாலிபன் ஸ்டேஷன் மாஸ்டருடன் சச்சரவு செய்யத் தொடங்கினான். இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வித்யாசாகரர் அந்த இளைஞனிடம் சொன்னார்: "தங்களுக்கு எங்கே செல்ல வேண்டுமோ வாருங்கள். நான் உங்கள் பெட்டியை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போகிறேன்."

இதைக் கேட்ட வாலிபன் மிகத் திருப்தி யடைந்தான். பெட்டியை அவரிடம் கொடுத்துவிட்டு என்ன கூலி உனக்கு உண்டோ அதைக் குறைக்காமல் தந்து விடுவதாகச் சொல்லிக்கொண்டே ஸ்டேஷனுக்கு வெளியில் நடந்தான். வித்யாசாகரர் பெட்டியை எடுத்துக்கொண்டு அவன் பின்னாலேயே சென்றார். வீடு வந்து சேர்ந்ததும் பெட்டியை வைத்துவிட்டு வித்யாசாகரர் திரும்பவே அந்த இளைஞன் இரண்டணாச் சில்லறையை அவரிடம் நீட்டினான். வித்யாசாகரர் பணத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டுப் புன்முறுவலுடன் அவனிடம் விடை பெற்றுச் சென்றார். அப்பாவி இளைஞனுக்கு அவர்தான் வித்யாசாகரர் என்பது எப்படித் தெரியும்?

அன்று மாலையில் வித்யாசாகரர் பேசவிருந்த வரவேற்புக் கூட்டத்திற்கு அந்த இளைஞனும் வந்தான். வித்யாசாகரரைக் காண வேண்டுமென்னும் ஆவலால் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு முன்னால் வந்தான். வித்யாசாகரரைக் கண்டவுடன் அவன் சப்த நாடியும் அடங்கிவிட்டது. காலையில் தன் பெட்டியைச் சுமந்து வந்த அப்பெரியவருக்குத்தான் மாலைகள் அணிவித்து மேடைக்கு அழைத்து வந்ததைக் கண்ட வாலிபன் துணுக்குற்றான். தன் அறியாமைக்கு மிக வருந்தி உள்ளம் நொந்தான். அன்றே கூட்டம் முடிந்தவுடன் அவரது இருப்பிடம் ஏகி, கண்ணீர் மல்கி மன்னிப்புக் கோரி நின்றான். வித்யாசாகரரும் அவனை அன்புடன் அணைத்து ஆறுதல் கூறினார்.

பெரிய மகான்கள் எல்லாரும் எளிய வாழ்க்கையே நடத்தினார்கள். உள்ளத்தினால்தான் மகானாக முடியும்; உடையினால் ஆக ஆகமுடியுமா?

# கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

**பி. லக்ஷ்மிநாராயணன்,**
**புது டில்லி.**

கண்ணாடியைக் கண்டு பிடித்தது யார்? அது எப்படிக் கண்டு பிடிக்கப்பட்டது?

பழங்கால விஷயங்கள் பலவற்றில் உண்மை இன்னது என்று நிச்சயமாகத் தெரிவதில்லை. ஆனால், அவைகளைப்பற்றிப் பல விருத்தாந்தங்கள் கர்ண பரம்பரையாக வழங்கி வருகின்றன. கண்ணாடி செய்வதைக் கண்டு பிடித்ததைப்பற்றி அப்படிப்பட்ட ஒரு பழங் கதையை ப்ளினி (Pliny) என்னும் ரோம ஆசிரியர் ஒருவர் கூறுகிறார். அது மிகவும் ரஸமான கதை.

பண்டைக் காலத்தில் பினீஷியா (Phoenicia) நாட்டு வியாபாரிகள் ஒரு கப்பல் நிறைய சோடா உப்பை (Soda) ஏற்றிக் கொண்டு கடலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்கள். பலமான புயல் காற்றடித்து அவர்களுடைய கப்பலை ஒரு கரை ஓரமாக ஒதுங்கச் செய்தது. நல்லவேளையாக அது ஒரு மணற்பாங்கான கடற்கரை. அங்கே நங்கூரம் பாய்ச்சி, கடலிலிருந்து கரைக்கு வந்து, புயல் நிற்கும்வரை கரையில் தங்கினார்கள்.

அப்போது சமைப்பதற்கு அடுப்புக் கட்டிகளாகக் கற்கள் ஒன்றும் அங்கே இல்லாததால், சோடா உப்புக் கட்டிகளை வைத்து, அவைகளின்மேல் பானைகளை ஏற்றி நெருப்பு மூட்டிச் சமையல் செய்தார்கள். சமையலான பிறகு சோடாக் கட்டிகளை நகர்த்திய போது, அடுப்பு மூட்டிய இடத்திலே பளபள என்று ஒரு பொருள் இருக்கக் கண்டார்கள். அதுதான் கண்ணாடி என்று பிற்காலத்தில் வழங்கப்பட்ட பொருள். சோடா உப்பும் மணலும் அடுப்பின் சூட்டில் உருகி ஒன்றாகி, கண்ணாடியாக அமைந்தன.

இது நிஜமாக நடந்த காரியம் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், அடுப்பில் மூட்டிய நெருப்பு சாதாரணமாக மணலைக் கண்ணாடியாக உருக்குவதற்குப் போதுமான வெப்பம் உடையதாக இருக்காது என்று சில விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

எகிப்து நாட்டில்தான் முதல் முதலாகக் கண்ணாடி செய்யத் தெரிந்துகொண்டார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய நாட்டிலும் மிகப் பழங்காலம் முதலே கண்ணாடிகளைச் செய்யத் தெரிந்துகொண்டிருந்தார்கள். பற்பல வகையான ரத்தினங்களைப் போன்ற நிறங்களை உடைய கண்ணாடிகளை நம் நாட்டில் பழங்காலத்தில் செய்து வந்ததாகத் தெரிகிறது.

**எஸ். பார்வதி, மலேயா.**

மின்சாரம் ஒரு விநாடிக்கு எவ்வளவு தூரம் பாய்கிறது?

மின்சார அலைகள் கிட்டத்தட்ட நொடிக்கு (Second) 186,000 மைல் வீதம் செல்லுகின்றன. ஒளியின் வேகமும் இதுவே.

**சி. பாலசுப்பிரமணியன்,**
**தஞ்சாவூர்.**

ஆற்று மணலில் காந்தம் இருக்கிறது என்று கூறுகிறார்களே, ரோட்டு மண்ணிலும் காந்தம் இல்லையா?

இது ஒரு மாதிரியான கேள்வி. சிற்சில இடங்களில் உள்ள ஆற்று மணலில் மிகச் சிறிய 'காந்த சக்தி' உள்ள இரும்புத் தாதுப் பொருள்களின் துகள்களும் இருக்கக்கூடும். அப்படிப்பட்ட மணலை ரோட்டின் தூவினால் அங்கும் அவை மண்ணோடிக் கிடக்கலாம். ஆனால், பொதுப்

பட ஆற்று மணலும், தெருப் புழுதியும் காந்த சக்தி உடையவை யாக இருப்பதில்லை.

**எஸ். ராஜகோபால், புனா.**

**அ**ணுக் குண்டைக் கண்டு பிடித்தவர் யார்?

**அ**ணுக் குண்டு கண்டுபிடிக்கப் பட்டது என்று சொல்வதைவிட, அது புத்தமைப்பாக இயற்றப் பட்டது என்று சொல்லுவதே பொருந்தும்.

அணுக் குண்டை அமெரிக்காவி லுள்ள லாஸ் அலாமாஸ் (Los Alamos) என்னும் இடத்தில், சில மிகச் சிறந்த விஞ்ஞானிகள் ஒன்று சேர்ந்து, ஆலோசித்து, முயன்று, ரகசியமாக இயற்றினார்கள். அது ஒரு புத்தமைப்பு.

அப்படிப்பட்ட சக்தி உடைய பொருள் ஒன்றை இயற்றக்கூடும் என்று முதன் முதலாக ஐன்ஸ்டைன் (Einstein) என்னும் மகா மேதாவி கணக்குப் போட்டு, ஜோஸ்யம் சொன்னார். ஆனால், பற்பல நாடுகளைச் சேர்ந்தவர்களா யும் மகா நிபுணர்களாயும் உள்ள பல விஞ்ஞானிகள், முன் தெரிந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அஸ்திவாரமாகக்கொண்டு, படிப் படியாக நிர்மாணித்த சிகரமே அணுக் குண்டு.

**நா. வேணுகோபால்,**
**பூதப்பாண்டி.**

**வா**னவில் பகலில் மட்டும்தான் தெரியுமா? அல்லது இரவிலும் கூடத் தெரியுமா?

**வா**னவில் தோன்றுவதற்குக் காரணம் மேகமும், வெயி லும்தான். மேகங்கள்மீது சூரிய கிரணங்கள் சிற்சில வகையாகப் படும்போதுதான் நமக்கு வானவில் தோன்றுகிறது. ஆகவே, இரவில் அதாவது சூரியன் அஸ்தமித்த பிறகும், சூரியன் உதிப்பதற்கு முன்னும் வானவில் தோன்றுவ தில்லை; தோன்றவும் முடியாது.

**ஆர். கல்யாணராமன்,**
**வாலாஜாபேட்டை.**

**சி**று கற்களைத் தண்ணீரில் போட்டால் அவை உடனே அமிழ்ந்துவிடுகின்றன. ஆனால் மிகப் பளுவான கப்பல் தண்ணீரில் மிதக்கிறது, எப்படி? விளக்கவும்.

**ஒ**ரு பொருள் மிதப்பதும் மூழ்குவதும் அது விலக்கித் தள்ளிய நீரின் எடையைப் பொறுத்திருக் கிறது. அதாவது, அதனால் இடம் பெயர்ந்த நீரின் பளுவைப் பொறுத்திருக்கிறது.

நீரின்மேல் எறிந்த கல்லைக் கவனித்தால், அந்தக் கல்லினால் ஒதுக்கப்பட்டு இடம் பெயர்ந்த நீரின் எடை அந்தக் கல்லின் எடையைவிடக் குறைவாக இருக் கிறது. ஆதலால் கல் அமிழ்ந்து போகிறது.

தண்ணீரின் மீது மிதக்கும் கப்பலைக் கவனித்தால், கப்பலின் ஒரு பகுதி. தண்ணீருக்குள் அமிழ்ந் திருக்கிறது; ஒரு பகுதி தண்ணீ ருக்கு மேல் நிற்கிறது என்பது தெரியும். தண்ணீரில் அமிந்துள்ள கப்பல் பகுதியால் விலக்கப்பட்டு இடம் பெயர்ந்த நீரின் எடை யானது, அந்தக் கப்பலின் மொத்த எடைக்குச் சரியாக இருக்கிறது. இதற்குக் காரணம் கப்பலின் உட் பகுதி பெரும்பாலும் காற்றால் நிரப்பப்பட்டிருப்பதுதான். இப்ப டித் தண்ணீருள் படிந்த கப்பலின் பகுதியும், இடம் பெயர்ந்த தண்ணீரும் சம எடை உள்ளவை களாக இருக்கும்போது கப்பல் மிதக்கிறது.

ஆனால், கப்பலில் மேன்மேலும் பளுவான பொருள்களை ஏற்றினால், அது மேலும் மேலும் தண்ணீருக் கும் அமிழ்ந்து வரும். கடைசியில் மூழ்கவும் செய்யலாம்.

நீங்கள் காகிதத்தால் செய்து நீரில் மிதக்கவிடும் கப்பலில் சிறிது சிறிதாக மணலையோ பொடிக் கற்களையோ போட்டு வந்தால் இப்படி அந்தக் கப்பல் வரவரத் தாழ்ந்து நீரில் மூழ்கிப் போவ தைக் கவனிக்கலாம்.

**ஏ. டி. ரங்கநாதன், வெற்றியூர்.**

**கா**ல்வனஸ்கோப்பின் உப யோகம் என்ன? அதைக் கண்டு பிடித்தவர் யார்?

**கா**ல்வனுஸ்கோப்பு (Galvanoscope) என்பது மின்னேட்டம் ஓடுவதைக் கண்டுபிடிக்க உதவும் கருவி.

கால்வனுஸ்கோப்பு என்னும் கருவியில் செங்குத்தாக வைக்கப்பட்ட ஒரு கம்பிச் சுருள் இருக்கும். அதன் நடுவிலே ஒரு காந்த ஊசி தொங்கவிடப்பட்டிருக்கும்; அல்லது, ஒரு முளையின்மீது, தாராளமாகச் சுழலும்படி அது வைக்கப்பட்டிருக்கும்.

அந்தக் காந்த ஊசியும், கம்பிச் சுருளும் ஒரே திசையாக இருக்கும்படி, கம்பிச் சுருளை வைத்து, அந்தச் சுருளின் வழியாக மின்சார ஓட்டம் நிகழும்படி செய்தால், அந்தக் காந்த ஊசி விலகித் திரும்பும். இந்த நிகழ்ச்சியிலிருந்து கம்பிச் சுருளின் வழியாக மின் ஓட்டம் நிகழ்கிறதா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

கால்வனுஸ்கோப்பை முதன் முதலில் கண்டு பிடித்தது யார் என்பதைப் பற்றி நிச்சயமாகத் தெரியவில்லை. 1820-இல் ஷ்வைகர் (Shweigger) என்பவர் 'பெருக்கி' (Multiplier) என்னும் ஒரு கருவியைக்கொண்டு மின்சாரம் ஓடுவதைத் தெரிந்து கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

**வி. வி. முத்துக்குமாரசாமி, சென்னை-3.**

**ரெ**யில் எஞ்ஜினில் மின்சாரம் எப்படி உண்டாக்கப்படுகிறது?

**ரெ**யில் எஞ்ஜினில் ஒரு டைனமோ வைக்கப்பட்டிருக்கும்.

ரெயில் எஞ்ஜின் ஓடும்போது அதன் சக்கரங்கள் சுழலுகின்றன. சக்கரங்களின் அச்சும் சுழலுகிறது. எஞ்ஜினிலுள்ள டைனமோவின் கம்பிச் சுருள் அந்த அச்சோடு சுழலும்படி இணைக்கப்பட்டிருக்கிறது.

எஞ்ஜின் ஓடும்போது, அந்தக் கம்பிச் சுருளானது ஒரு காந்தத்தின் துருவங்களுக்கு இடையே சுழலுகிறது. அப்போது மின்சார ஓட்டம் உண்டாகிறது. அந்த மின்சார ஓட்டத்தை சேமக்கலங்களால் (Accumulators) அமைந்த பாட்டரியில் (Battery) மின்சாரம் ஏற்றும்படி வேலை வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட சேமக்கல பாட்டரி சாதாரணமாக எல்லா மோட்டார் கார்களிலும் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

டைனமோவிலிருந்து மின்சார ஏற்றத்தைப் பெற்ற பாட்டரி வேண்டும்போது மின்சார ஓட்டத்தைத் தருகிறது. எஞ்ஜினில் இருப்பது போலவே ரெயில்வண்டி ஒவ்வொன்றிலும் இப்படிப்பட்ட அமைப்பு இருக்கிறது. ரெயில் ஓடும்போது மின்சார ஏற்றம் பெற்ற பாட்டரிகள் ரெயில் ஓடாமலிருக்கும்போதும்கூட விளக்குகள் எரிவதற்கும், விசிறிகள் சுழல்வதற்கும் வேண்டிய மின்சாரத்தை அளிக்கின்றன.

**பி. ஏ. மகமது உசேன், சென்னை.**

**எ**திரொலி எப்படி உண்டாகிறது?

**ஒ**ரு ரப்பர் பந்தைச் சுவரின் மீது எறிந்தால் அந்தப் பந்து, சுவரில் மோதிய பின், துள்ளி நம்மை நோக்கி வருகிறது. ஒரு பெரிய கட்டடத்துக்கு எதிராகவோ அல்லது ஓர் உயர்ந்த குன்றுக்கு எதிராகவோ நின்றுகொண்டு ஓர் ஊதிலியை (Whistle) ஊதினுலும், அல்லது பலமாக ஒரு மணியை அடித்தாலும், அல்லது உரக்கக் கூவினுலும், அப்போது இயற்றப்பட்ட ஒலியானது எதிரிலுள்ள கட்டடத்தின் மீதோ, குன்றின் மீதோ மோதி சுவரில் மோதிய பந்து உன்னிடம் வந்தது போல உன்னிடம் திரும்பிவந்து சேருகிறது. அப்போது நீ இயற்றிய ஒலியின் எதிரொலியைக் கேட்கிருய்.

பெரிய தடைகளால் ஒலி தடுக்கப் பட்டு, பிரதிபலிப்பதால் (Reflection) எதிரொலிகள் உண்டாகின்றன.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
2/11/96
சென்னை 600 008

# அன்னை

## த. ஜயந்தி

பிரபல பணக்காரர் வேதாசல முதலியார் வீடு அன்று மிகவும் அமர்க்களத்துடன் காணப்பட்டது. காரணம் அவருடைய வைர மோதிரத்தைக் காணவில்லை. வீட்டில் வேலைசெய்யும் எல்லா வேலைக்காரர்களும் முதலியார் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர். அவருடைய அருகில் அவருடைய அருமை மகன் குமாரும் நின்று கொண்டிருந்தான்.

''நான் நெசமா எடுக்கலீங்க.'' இது வேலைக்கார முருகனின் குரல்.

''உங்க சொத்தையே தின்னுப்புட்டு உங்களுக்கே நான் துரோகம் செய்வேனுங்களா?'' இது வேலனின் குரல்.

''சாமி சத்தியமாக நான் பாக்கலீங்க.'' இது கந்தனின் குரல்.

வேலைக்காரிகளான வள்ளியும் கண்ணம்மாவும் விசாரிக்கப்பட்டனர். அவர்களும் ''எடுக்கவில்லை'' என்று கூறிவிட்டனர்.

''இந்த மோதிரம் போனால் எனக்கு இதைப் போல எத்தனையோ மோதிரம் கிடைக்கும். ஆனால் நான் இதை ஒருவரின் ஞாபகார்த்தமாக வைத்துக் கொண்டிருந்தேன். நான் குளிக்கும்போது இதைக் கழற்றிவைத்தேன். பிறகு அதை எடுத்துக் கொள்ள மறந்துவிட்டேன். ஒரு மணி நேரம் கழித்து வந்து பார்த்தால் என் மோதிரத்தையே காணோம். என்ன அக்கிரமம் இது?'' என்று கத்தினார் முதலியார்.

''எசமான், நான் சொன்னா நீங்க நம்பமாட்டீங்க. ஏன்னா, கண்ணம்மா பேரிலே உங்களுக்கு அத்தனை நம்பிக்கை. என்னவோ நான் கண்ணால் கண்டதைச் சொல்லிப்புடறேனுங்க. நீங்கக் குளிச்சுட்டுப் போனப்புறம் கண்ணம்மா அங்கே வந்ததுங்க. மோதிரத்தைக் கையில் எடுத்துப் பார்த்ததுங்க. என்னைக் கண்டதும் சட்டுனு மறச்சுக்கிட்டு அதோட குடிசைக்குப் போயிடுத்துங்க'' என்றாள் வள்ளி.

''சுத்தப் பொய். கண்ணம்மா பேரில் உனக்கு எப்போதுமே பொறாமை. நான் இதை நம்பமாட்டேன்'' என்றான் குமார்.

குமாருக்கு வயது பத்துதான் ஆகிறது. வயதிற்கு மீறிய அறிவுள்ளவன். கண்ணம்மா வேலைக்கு வந்து இரண்டு வருடங்கள்தான் ஆயின. எதனாலோ குமாருக்குக் கண்ணம்மாவைக் கண்டால் அவ்வளவு பிரியம். அவளை ஒரு நாள் பார்த்துப் பேசாவிட்டால் அவனுக்கு என்னவோபோல இருக்கும்.

**ஹெட்மாஸ்டர்:** டேய் வெங்கிட்டு, உன் வாத்தியார் உன் மேலே ஏதோ ரிப்போர்ட் சொல்றாரே! வாத்தியார் அப்பாவுக்குச் சமம்டா!

**வெங்கிட்டு:** அப்பாடியானா, இந்த மாசத்துச் சம்பளத்தை அவரையே கட்டிடச் சொல்லுங்க, ஸார்.

P. S. **வெங்கடரமணி, வாணியம்பாடி.**

---

''கண்ணம்மா, நீ மோதிரத்தை எடுத்துப் பார்த்தாயா?'' என்று கேட்டாள் முதலியாரின் மனைவி.

''நான் கையிலே எடுத்து அதைப் பார்த்தேனுங்க. பிறகு அங்கேயே வச்சுட்டேனுங்க'' என்றாள் கண்ணம்மா.

''பொய் சொல்லுதுங்க அம்மா. மோதிரத்தை எடுத்துக்கிட்டு அதோட குடிசைக்குப் போயிட்டுதுங்க; நீங்க வேணும்னா அதோட குடிசையைப் போய்ப் பாருங்க'' என்றாள் வள்ளி.

உடனே பங்களாவின் பின்புறத்தில் இருக்கும் அவளுடைய குடிசையைச் சோதனை போட்டனர். மோதிரம் கிடைத்துவிட்டது.

குமாரினால் நம்பவே முடியவில்லை. கண்ணம்மாவா இப்படிச் செய்தாள்?

''கண்ணம்மா, நீ இப்படிச் செய்வாய்னு நாங்க நினைக்கல்லே. எப்படியோ மோதிரம் கிடைத்துவிட்டது. இனிமேல் நீ வேலைக்கு வர வேண்டாம். இந்தா, இந்த மாசத்துப் பணம். பிழைத்துப்போ. இனிமேலாவது இந்த மாதிரி எண்ணம் வைத்துக் கொள்ளாதே'' என்று கூறினாள் முதலியாரின் மனைவி.

''நீங்க இப்ப இல்லாவிட்டாலும் எப்பவாவது உண்மையை உணர்ந்து கொள்வீங்க'' என்று கூறிவிட்டு நீர் மல்கிய கண்களுடன் குமாரை ஒரு தடவை பார்த்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள் கண்ணம்மா.

* * *

**க**ண்ணம்மா வீட்டை விட்டுச் சென்ற சில மணி நேரத்திற்குப் பிறகு ஒருபையன் ஒரு கடிதத்தைக் குமாரின் கையில் கொடுத்தான். பிறகு அந்தப் பையன் போய் விட்டான். குமார் அதைப் பிரித்தான். படித்தான்:

''கண்மணி குமார்,

நான்தான் இக்கடிதத்தை எழுதுகிறேன். இக்கடிதம் உன் கையில் கிடைக்கும்பொழுது நான் இவ்வூர் எல்லையை விட்டே போய் விடுவேன். இப்பொழுது நான் உனக்கு ஓர் உண்மையைச் சொல்லப்போகிறேன். என்ன தெரியுமா? நான்தான் உன்னைப் பெற்றெடுத்த தாய். நீயே என் சொந்த மகன்.

இதைப் படித்ததும் திடுக்கிடாதே. ஆச்சரியப்படாதே.

'நான் எப்படி முதலியாரின் வீட்டில் வளர்கிறேன்?' என்று கேட்கிறாயா? கண்ணே, கொஞ்சம் பொறுமையுடன் படி.

உன் தந்தையும் யாரோ ஒரு பணக்காரரும் கூட்டு சேர்ந்து 'கள்ள மார்க்கட்' வியாபாரம் செய்துவந்தனர். ஒரு நாள் உன் தந்தை போலீஸாரால் பிடிக்கப் பட்டுவிட்டார். உன் தந்தையுடன்

கூட்டு வியாபாரம் செய்தவர் தன் பழியை யெல்லாம் உன் தந்தை யின்மீதே போட்டுவிட்டார். இத ஞல் சொத்தெல்லாம் கரைந்தது.

உன் தந்தை ஜெயிலுக்குப் போன பிறகுதான் நீ பிறந்தாய். உன்னைப் பார்த்தால் பெரிய பணக் காரர் வீட்டுக் குழந்தை மாதிரி இருந்தது. உனக்கு நான் அருமை யுடன் இட்ட பெயர் என்ன தெரியுமா? கண்ணன். திடீ ரென்று ஜெயிலிலேயே உன் தந்தை இறந்துவிட்டார் என்ற தகவல் கிடைத்தது. அப்பொழுது நீ மூன்று மாதக் குழந்தை.

கண்ணே, அப்போது நான் அடைந்த துன்பம் எவ்வளவு தெரியுமா? கஷ்டப்பட்டுக் கூலி வேலையே செய்து உன்னை வளர்த்து வரலானேன்.

உன்னைப் பார்த்தால் பணக் காரர் வீட்டுக் குழந்தை மாதிரி இருப்பாய் என்று சொன்னேன் அல்லவா? பலர் என்மீது சந்தேகப் பட்டார்கள். உன்னை வளர்ப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. எனக்குப் போதிய வருவாயும் கிடைக்கவில்லை. என்னிடம் இருந்தால் நன்ருக வளரமாட்டாய். பெரிய பணக் காரரிடம் உன்னை விட்டால் நீ நன்ருக வளர்வாய் என்று நினைத் துக்கொண்டேன்.

ஒரு நாள் இந்த வேதாசல முதலியாரும் அவருடைய மனைவி யும் கோவிலுக்கு வந்தனர். அதைப் பார்த்த நான் எப்படியா வது உன்னை அவரிடம் சேர்க்க எண்ணி, அவர்கள் வரும் வழியில் உன்னைப் போட்டுவிட்டு மறைவில் நின்றுகொண் டிருந்தேன். நல்ல காலம்; நீ அவர்கள் கண்ணில் தென்பட்டாய். உன் அழகில் இருவரும் மயங்கிவிட்டனர்.

'நம்ம குறையை அறிந்து தெய்வம்தான் நமக்கு இதை அருளியிருக்கிருர்' என்ருர் முதலியார் சந்தோஷத்துடன்,



முதலியாரின் மனைவிக்கு அதை விடச் சந்தோஷம். இருந்தாலும் யார் வீட்டுக் குழந்தையாகவாவது இருக்கப் போகிறதே என்று சிறிது நேரம் பார்த்தனர். ஒருவரும் காணவில்லை. பிறகு உன்னை எடுத்துக்கொண்டு காரிலே வீட்டிற்குப் போய்விட்டனர். அப்போது நீ ஏழு மாதக் குழந்தை.

கண்ணே! அதற்குப் பிறகு நான் வேறு ஊருக்குப் போனேன். பல கஷ்டங்களை அடைந்தேன்.

வருடங்கள் எட்டு உருண்டோடின. மறுபடியும் மதுரைக்கே வந்தேன். என் நல்ல காலம் முதலியார் வீட்டில் எனக்கு வேலை கிடைத்தது. சந்தோஷத்துடன் உன்னைப் பார்த்துக்கொண்டே வேலைகளைச் செய்தேன். கூடிய சீக்கிரம் ஒரு விஷயத்தை அறிந்துகொண்டேன். இந்த முதலியார்தான் உன் தந்தையோடு கூட்டு வியாபாரம் செய்தவர் என்பதைத்தான்.

இன்று காலையில் காணுமல் போன மோதிரம் உன் தந்தையினுடையதுதான்.

நான் அதைக் கையில் எடுத்துப் பார்த்தேன். என் சந்தேகமும் தீர்ந்துவிட்டது. ஆனல் நான் மோதிரத்தை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டேன். இந்த வள்ளிதான் எடுத்து என் குடிசையில் போட்டிருக்கிறள். கடவுள் அவளை மன்னிப்பாராக.

கண்ணே, உன்னை அடிக்கடி பார்க்கமுடியாது. நீ பெரியவனுக ஆனதும் உன்னை எப்படியாவது பார்ப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அதனல், நான் போகிறேன், இந்த ஏழை அன்னையை மறந்து விடாதே.

இப்படிக்கு,
உன்னைப் பெற்ற தாயார்,
கண்ணம்மா.''

இதைப் படித்து முடித்ததும் விக்கி விக்கி அழுதான் குமார். இவ்வளவு நேரமும் இவன் பின்னுலேயே நின்றுகொண்டு கடிதத்தைப் படித்த முதலியார் ஆச்சரியமடைந்தார். குமாரின் முதுகைத் தட்டியபடி முதலியார், ''குமார், அழாதே. இதோ உன் தாயாரைக் கண்டுபிடிக்க ஆட்கள் அனுப்புகிறேன்'' என்றுர்.

எல்லாப் பக்கமும் ஆட்கள் சென்றனர். கண்ணம்மாவை அழைத்து வந்தனர். முதலியார் கண்ணம்மாவைப் பார்த்து, ''கண்ணம்மா! நீ என்னை மன்னித்துவிடு. உன்னை என் சொந்தச் சகோதரி மாதிரி நினைத்துக்கொள்கிறேன். அறிவிருந்தும் பணத்தாசையால் பழியெல்லாம் உன் கணவரின்மீது போட்டேன். பிறகுதான் எனக்குப் புத்தி வந்தது. உங்களைப்பற்றிய விஷயம் ஒன்றும் கிடைக்கவில்லை. கடவுள் செயலால் குமார்தான் என் நண்பனின் குழந்தை என்பதை இன்று அறிந்துகொண்டேன். நான் செய்ததற்கெல்லாம் பிராயச்சித்தமாகக் குமாரும் நீயும் என்னுடன்தான் இருக்கவேண்டும். உங்களைக் காப்பது என் பொறுப்பு. எனக்குப் பிறகு என் சொத்தெல்லாம் குமாருக்குதான். கண்ணம்மா, என்னை மன்னிக்க மாட்டாயா?'' என்று கண்களில் நீர் மல்கக் கேட்டார்.

''கண்ணம்மா, குமாரைப் பிரிந்து இனிமேல் எங்களால் வாழ முடியாது. நீயும் எங்களுடனேயே இரு. இல்லையென்றுல் உனக்கு நாங்கள் செய்த தீமைக்கு எங்களுக்கு நல்ல வழியே கிடைக்காது'' என்றுள் முதலியாரின் மனைவி.

''தவறு செய்வது மனித இயல்பு. திருந்தி நடப்பதே சிறந்த குணம். அதேபோல் நீங்க செய்த தவற்றை உணர்ந்துகொண்டுவிட்டீர்கள். உங்கள் இஷ்டப்படி நான் இங்கேயே இருக்கிறேன்'' என்றுள் குமாரை ஈன்றெடுத்தத் தாய்.

வள்ளியும் தான் செய்த தவற்றை உணர்ந்து, கண்ணம்மாவிடம் மன்னிப்புக் கேட்டாள்.

இதோ, குமாரைப் பாருங்கள். தன்னைப் பெற்ற அம்மாவின் அன்பான அரவணைப்பிலும், தன்னை வளர்த்த அன்னையின் அன்பான மொழிகளிலும் தன்னை வளர்த்து வருகின்ற தந்தையின் இனிய செயலிலும் உள்ளம் பூரித்து மகிழ்ந்து நிற்கிறுன்.

ஐயா! உங்களைப் பார்த்தால் நெடுந்தூரத் திலிருந்து வருபவர்போலி ருக்கிறதே!
ஆமாம்; அதைஏன் கேட்கிறாய்! உயிர் தப்பி வந்ததே பெரும் புண் ணிய மாய்ப் போச்சு!
அப்படியா? ஏன்?
நான் ஒரு வைத்தியன்! பாக்தாத் நகரத்திலிருந்து வருகிறேன். காமர் என்ற இளவரசனுக்குப் பைத் தியம் என்று போனேன். அது பெரிய கதை!
வழிப்போக்கன் காமருடைய கதையைப் பற்றிச் சொல்ல மர்ஜாமனுடைய முகம் தீவிரமாக வேலை செய்தது. உடனே அங்கே புறப்பட்டுப் போக வழி கேட்டுக் கொண்டான். . . .
நாலு காததூரம் பாலைவனத் தைக் கடந்து சென்றால் ஒரு கடல் வரும். அதில் மேற்குத் திசையாக இருபது தினங்கள் பிரயாணம் செய்ய வேண்டும். இருபத் தோராவது நாள் கண்ணுக்கு ஒரு பட்டணம் தெரியும். அது தான் காமர் இருக்கும் தேசம்!
சரி! அவசரகாரி யமாக நான் போக வேண்டும்! மிக்க வந்தனம்!

பாலைவனத்தைக் கடந்து கடலையடைந்து, பொன்னும் மணியும் கொடுத்து ஒரு பெரிய மரக்கலத்தைக் கட்டச் சொன்னான்.
காற்று இப்போது சாதகமாக வீசுகிறது. புறப்படலாமா?
அல்லாவின் கிருபை!
இருபது நாட்கள் ஆகிவிட்டன! நாளை பட்டணம் கண்ணுக்குத் தெரியும்!
ஆனால் இதென்ன! காற்று வலுக்கிறதே!

(தொடரும்)

# புதிர்க் கேள்விகள்

1. ரெயிலுடனேயே எப்போதும் வரும் போதும்; அதனுல் ஒரு பிரயோஜனமும் இல்லை.

2. ஆண்டிக்குக்கூட இந்தத் தலையை வாங்க அதிகாரம் உண்டு.

3. ஒரு வார்த்தை பு-வில் ஆரம்பித்து ம்-என்பதில் முடியும். அதற்குள்ளே ஆயிரக்கணக்கான எழுத்துக்கள் உண்டு. அது எது தெரியுமா?

4. டிரைவருக்கும் உபாத்தியாயருக்கும் என்ன வித்தியாசம்?

5. பாற்கடல் எங்கே இருக்கிறது?



6. உயர்ந்த சந்தோஷத்தை எப்போது பெறலாம்?

7. மிகவும் நீண்டிருக்கும்; கால்கள் கிடையாது; ஆனுல் செருப்புகளை மட்டும் அணிந்து கொள்ளும்.

8. நாம் ஏன் படுக்கைக்குச் செல்லுகிறோம்?

---

**விடைகள்:**

1. ரெயில் சத்தம்; 2. தபால் தலை; 3. புத்தகம்; 4. டிரைவர் தன் மனத்தை வழியின்மீது செலுத்துகிருர்; உபாத்தியாயர் மனத்தை வழிப்படுத்துவதில் முயலுகிருர்; 5. புராணங்களில்; 6. விமானத்தில் உயரப் பறக்கும்போது; 7. பாதை; 8. படுக்கை நம்மைத் தேடி வராது, அதனுல்.

# பாலர் கவி அரங்கம்

[கும்மி மெட்டு]

1. கண்ணனடி அதோ கண்ணனடி - நல்ல
கட்டழகு மிக்கக் கண்ணனடி!
வண்ணனடி மணி வண்ணனடி - அவன்
எண்ண மிழுத்திடும் மன்னனடி!

2. வீரனடி அவன் வீரனடி - கெட்ட
சூரனை வதைத்திட்ட தீரனடி!
மாரனடி சுகு மாரனடி - அவன்
மாண்பு மிகக்கொண்ட சீலனடி;

3. வேந்தனடி அவன் வேந்தனடி - நல்ல
வேய்ங் குழல்ஊதிடும் வேந்தனடி!
சாந்தனடி அவன் சாந்தனடி - அருஞ்
சத்தியத்தை நாடும் காந்தனடி!

4. வல்லானடி அவன் வல்லானடி - அந்த
வல்லவனை நன்றாய் வாழ்த்துங்கடி!
நல்லானடி அவன் நல்லானடி - நந்த
பாலன் அவனையே போற்றுங்கடி!

5. கூடுங்கடி ஒன்றாய்க் கூடுங்கடி - அந்தக்
கோகுல பாலனைப் பாடுங்கடி!
ஆடுங்கடி நன்றாய் ஆடுங்கடி - அந்த
ஆனந்தனை எண்ணி ஆடுங்கடி!

—பாபநாசம் பரசுராமன்.

## குயில்

குயிலே குயிலே வாவாவா!
குதித்துக் குதித்து வாவாவா!
பறந்து பறந்து வாவாவா!
பாடிப் பாடி வாவாவா!
மாமரத்துக் கிளையிலே
மனங்களிக்கும் பொழுதிலே;
மாலை வெயில் நேரத்திலே,
வண்ணக் குரலை எழுப்புவாய்!
குரலைக் கேட்டு நாங்களும்
குதித்துக் குதித்து ஆடுவோம்!
கறுப்பு நிறக் குயிலேநீ
விருப்புடனே பாடவா!

—ரா. வெங்கடேசன், கொத்தாம்பாக்கம்.

# சந்திரகிரிக்கோட்டை

'ஜனு'

விமலனுடைய மன நிலையை எப்படி வர்ணிப்பது? தன்னுடைய உடலிலிருந்து அப்படியே ஆவி பிரிந்துவிடப் படாதா என்ற ஒரே எண்ணந்தான் அவனிடம் மிஞ்சி நின்றது. இத்தகைய பெரிய அதிர்ச்சி ஏற்பட்டும், அவமானம் ஏற்பட்டும், அவன் உயிர் எப்படி இன்னும் அவன் உடலில் தங்கியிருந்தது!

''இளைய அத்தான்! மிகவும் கலங்கி விட்டீர்கள் போலிருக்கிறது. இல்லையா?'' என்று சொல்லி இந்துமதி களங்கமற்ற சிரிப்புச் சிரித்தாள்.

விமலனுடைய சிந்தனை இந்த உலகத்தில் இருந்தால் அல்லவா அவள் சிரிப்பும் பேச்சும் அவனுக்குத் தெரிவதற்கு! அதுதான் அவன் வசத்திலேயே இல்லையே!

''குந்தவி சொன்னது சரியாகத்தான் இருக்கிறது. அவள் எத்தனை கெட்டிக்காரி! உங்களுக்கு ஏற்ற அருமையான பெண் அவள்தான்!''

இப்பொழுதுதான் விமலனுடைய காதில் அவள் பேச்சு விழுந்தது.

''அத்தான்! ஒருவர் வீராதி வீரராக இருக்கலாம். முன் கோபக்காரருக்கு அந்த வீரம் சமயத்துக்குப் பயன்படுவதில்லை. இத்தனை பாளையக்காரராலும் கண்டு பிடிக்க முடியாத ஒன்றை அவள் பார்த்த உடனேயே தெரிந்துகொண்டுவிட்டாளே! அதுதான் எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. சோழ நாட்டுப் பெண்கள் சோடை போவதில்லை'' என்றாள் இந்துமதி.

விமலனுக்கு இந்த வார்த்தைகள் கண்களைத் திறந்துவிட்டதுபோலிருந்தன. குந்தவியின் மாயச் சிரிப்புக்கு இப்பொழுதுதான் அவனுக்கு அர்த்தம் புரியலாயிற்று. பெரிய கோட்டையில் நடந்த ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியும் அவன் மனக் கண் முன்னே நிழலாட்டம் ஆடியது. கடைசியாகக் குந்தவி சொன்ன வார்த்தைகள் இப்போது கணீர் என்று காதருகில் ஒலிப்பதுபோல் இருந்தன: 'இளவரசே! இந்துமதியை மறந்து விடுங்கள்!' 'இளவரசே! இந்துமதியை மறந்து விடுங்கள்!'

நொய் நொய்யென்று அந்த வார்த்தைகள் வர வர உரத்த குரலில் அவன் காதுகளைத் துளைப்பதுபோல் ரீங்காரம் செய்யத் தொடங்கின.

அவனால் சகிக்க முடியவில்லை; காதுகளைக் கப்பென்று இப்பொழுது கேட்பதுபோல் பொத்திக்கொண்டான். ''நிறுத்து, நிறுத்து!'' என்று குந்தவிக்குக் கட்டளையிடுவதாக எண்ணிக்கொண்டு கூவினான்.

டக் டக் டக் டக் டக்!

குதிரைகளின் குளம்பொலி சமீபித்து வருவது கேட்டது. ராஜகுமாரி திரும்பிப் பார்த்தாள். அவள் ஏறியிருந்த குதிரையுடன் இரண்டு மூன்று வீரர்கள் அவளைத் தேடிக்கொண்டு வருவது தெரிந்தது.

விமலன் குதிரையை விட்டு இறங்கி நின்றுகொண்டான். அதற்குள் அந்த வீரர்கள் இளவரசிக்கு என்ன ஆபத்தோ ஏதோ என்று திகிலுடன் உஷாராக உருவிய வாட்களுடன் நெருங்கி வந்தார்கள்.

ராஜகுமாரி மிடுக்காக நிமிர்ந்து, ''கடம்பா! கத்தியை உறையில் போட்டுக்கொள்! காளன் எங்கே?'' என்று கையை அமர்த்தியவாறே கேட்டாள்.

''அவர்கள் வேறு பக்கமாக வருகிறார்கள். அதற்குள் நாமே அங்கே சாலைக்குப் போய் விடலாம்!'' என்று கடம்பன் உருவிய வாளை உறையில் போட்டுக்கொண்டே பதில் அளித்தான்.

''சரி; அமைச்சர் அருளேந்தியின் கையெழுத்திட்ட மற்றொரு ஓலை இருக்கிறதா உன்னிடம்?'' என்று கேட்டாள் ராஜகுமாரி.

''என்னிடம்தான் இதோ இருக்கிறது!'' என்று அம்பறுத் தூணியிலிருந்து அவன் ஒரு சுருளை எடுத்து நீட்டினான்.

''அதை இப்பொழுதே பெரிய கோட்டைக்கு அனுப்பு. குந்தவி இருப்பாள். அவளிடம் காட்டிவிட்டு, அவள் யாரிடம் அதைக் கொடுக்கச் சொல்கிறாளோ அவரிடம் கொடுக்கச் சொல்லு! நாளைக் காலை பத்து நாழிக்கு நாம் இன்று போல அந்தச் சோலைக்கு அருகே காத்திருப்போம்! உடனே சேர்வராயனை அனுப்பு! நாம் கூடாரத்துக்குப் போவோம்!'' என்று மடமடவென்று உத்தரவுகள் போட்டாள். பிறகு விமலனைப் பார்த்து, ''இளைய அத்தான்! உங்கள் மனத்தில் எது இருந்தாலும் அதை நாளை மத்தியான்னம் வரையில் ஒதுக்கிவிட்டு எங்களோடு வாருங்கள். நாளைக்கு எல்லாரும் சேர்ந்தே சந்திரகிரிக்குப் போகலாம்!'' என்றாள் ராஜகுமாரி.

விமலன் அவளை அழகு சுந்தரி என்று நினைப்பதா, அறிவு சுந்தரி என்று நினைப்பதா என்று பிரமித்துச் செயலிழந்தவண்ணம் அவர்களைப் பின்தொடர்ந்தான்.

எப்படி எப்படியோ சுற்றிவிட்டு அவர்கள் மிக எளிதாக முந்தி விமலனை மடக்கிய இடத்துக்கு அருகே வந்துவிட்டார்கள். அந்த இடத்துக்கு வருகிற மற்றொரு கிளைப் பாதை வழியே சென்றார்கள். கும்பலாக அடர்ந்திருந்த ஒரு சோலை அங்கே இருப்பதை விமலன் கண்டு கொண்டான். நடுவிலே மிகவும் பாதுகாப்பான இடத்தில் சிறப்பான கூடாரம் ஒன்றை அங்கே அமைத்திருந்தார்கள். இரண்டு மூன்று தாதிகளும் ஈட்டி தாங்கிய இரும்புக் கவச வீரர்களும் அங்கே காவலாக இருந்தார்கள். ராஜகுமாரிக்கு ஏற்ற சிறிய தடாகம் கூட ஒன்று அருகில் இருந்தது. அந்த இடத்தை அடைந்ததும், ''கடம்பா! அத்தானுக்கு வேண்டிய வசதிகள் பண்ணிக் கொடு! அவர் மிகவும் களைத்துச் சோர்ந்து போயிருக்கிறார். அவரை உடனே கவனி!'' என்று கூறிவிட்டுத் தன் கூடாரத்துக்குள் நுழைந்தாள்.

தூரத்தில் படைத் தலைவனை காளன் வருவது தெரிந்தது. விமலன் சிந்தனை தேங்கிய உள்ளத்தில் ஆயிரம் கேள்விகள் தோன்ற மேலும் களைத்துப் போனான்.

* * *

மறுநாள் காலை பத்து நாழிகை இருக்கும். விமலன் தன்னுடைய கூடாரத்தின் வெளியே ஒரு மரத்தடியில் உட்கார்ந்து ஏதோ பராக்காகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ராஜகுமாரி ஐந்தாறு வீரர்களுடன் அப்போது குதிரைகள் மீதேறி சந்திரகிரி செல்லும் பாதையை நோக்கி வேகமாகச் செல்வதைக் கண்டான்.

ஒரு நாழிகை வரையில் அவனுக்கு என்ன நடந்ததென்பதே தெரியவில்லை. ஆனால் பெரிய சத்தம் போட்டு யாரோ கூவுகிற குரல் கேட்டு நீலவேணியின் மீதேறி அவன் வெளிப்பட்டான். அங்கே அவன் கண்ட காட்சி அவனை மீண்டும் திகைப்பில் ஆழ்த்தியது. அமலன் தன்னைப் போலவே ஐந்தாறு குதிரை வீரர்களுக்கு இடையே நிற்பது தெரிந்தது.

பஞ்ச கல்யாணியின் லகான் முதல் நாளைப் போலவே துண்டிக்கப்பட்டிருந்தது. இளைஞன் வேஷத்திலிருந்த ராஜகுமாரியின் கையில் வாள் இல்லை. காளன் வாளை உருவிக்கொண்டு அமலனை எதிர்த்து நின்றான்.

விமலன் சாலை வழியாகச் செல்லாமல் பக்கத்துப் புதர்கள் வழியாகவே அவர்கள் யாவரும் நின்ற மேட்டுப் பாங்கான இடத்துக்கு வந்து, மறைவிலேயே நின்றான். கடைசி வரையில் என்ன நடக்கிறது என்பதை அறியவே அவன் இப்போது விரும்பினான்.

எல்லாம் முதல் நாள் தனக்கும் அந்த ராஜகுமாரிக்கும் நடந்த

வாக்கு வாதத்திலிருந்தே ஆரம்பமாயிருக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால் அமலன் கொஞ்சம்கூடப் பரபரப்பு அடையாமல் நின்றுகொண்டிருந்தான்.

''வீரர்களே; உங்களுக்கு வேண்டியது என்ன? எதையும் வாய் வார்த்தையாகக் கேளுங்கள். அதைவிட்டு லகானைத் துண்டிப்பது, தூஷணையாகப் பேசுவது என்று நீங்கள் ஆரம்பித்தால் எனக்கும் அப்படியெல்லாம் செய்யத் தெரியும். உங்கள் அவ்வளவு பேரையும் ஒரே சமயத்தில் எதிர்க்க வேண்டுமா, இல்லை, தனித் தனியாக எதிர்க்க வேண்டுமா! நீங்கள் எதை விரும்புகிறீர்களோ, அதைச் சொல்லுங்கள்!'' என்றான் அமலன். அவனுடைய குரலில் அமைதியும் அதே சமயத்தில் கம்பீரமும் கலந்திருந்தன.

''எங்களுக்கு வேண்டியது நீங்கள்தான். உங்களைச் சிறைப் படுத்தவே நாங்கள் விரும்பு

உபாத்தியாயர்: (பையனைப் பார்த்து) ஏண்டா பயலே, இனிமே உங்க அப்பாவை விட்டுக் காப்பி எழுதச் சொல்லாதேடா? மனை வின்னு வர இடத்திலே எல்லாம் 'பீடை,' 'சனியன்', 'மூதேவி' என்று எழுதியிருக்கார்டா.

—உபைதுர் ரஹ்மான் பாபு, மதுரை.

---

இரேும்!'' என்றாள் இளைஞன் வேஷத்திலிருந்த ராஜகுமாரி.

''நானாகச் சிறைப்பட்டால்தான் உண்டு; உங்களால் அது முடியாத காரியமாயிற்றே'' என்றான் அமலன்.

''எப்படியோ சிறைப்பட்டால் எங்களுக்குப் போதும்.''

''ஏன் என்பதையாவது நான் தெரிந்துகொள்ளலாமா?''

''சந்திரகிரிக்கு நீங்கள் போவதைத் தடுக்க வேண்டும் என்று எங்களுக்குக் கட்டளை.''

''ஓஹோ! யாருடைய கட்டளை? அப்படியானால் அவரிடமே நான் நேரில் வந்து பேசிக்கொள்கிறேனே. அவருடைய எண்ணம் என்ன என்றுதான் நானும் தெரிந்துகொள்கிறேனே! நியாயமற்ற எண்ணமாக இருந்தால் இரண்டில் ஒன்று பார்த்துக்கொள்கிறேன். வாருங்கள்; சிறைப்படாமலே நான் உங்களுடன் வரத் தயார்!'' என்றான் அமலன்.

உடனே ராஜகுமாரி கண் ஜாடை காட்டவே வீரர்கள் அவனை அழைத்துக்கொண்டு ராஜகுமாரி தங்கியிருந்த கூடாரத்தை நோக்கிச் சென்றார்கள். ஒருவரும் அறியாமல் விமலனும் பின்னாலேயே சென்றான்.

கூடாரத்தை அடைந்ததும் ராஜகுமாரி வாசலில் அவர்களை நிற்கச் செய்துவிட்டு, ''இங்கேயே இருங்கள்! நான் போய் நீங்கள் வந்திருப்பதாகச் சொல்லிவிட்டு வருகிறேன்!'' என்று உள்ளே போனாள்.

அமலன் அந்த அழகான பிரதேசத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டு நின்றான். தப்பிச் செல்ல முடியாமல் அவனை வீரர்கள் சூழ்ந்து நின்றார்கள். உள்ளே போன ராஜகுமாரி கால் நாழிகை ஆகியும் வெளிப்படவில்லை. கால் நாழிகை அரை நாழிகை ஆயிற்று. விமலன் மறைவிலிருந்தபடியே அங்கே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

முதலில் இரண்டு தாதியர்கள் மங்கள ஆரத்தியுடன் வெளிப்பட்டார்கள். அமலன் திகைப்புடன் அவர்களையே பார்த்துக்கொண்டு, 'இதெல்லாம் என்ன?' என்பது போல் நின்றான்.

பின்னாலே அலங்காரவல்லியாக ஒரு பெண்ணணங்கு தலைகுனிந்து மகா அடக்க ஒடுக்கத்துடன் வந்தாள்.

''இவளா ஆண் வேஷத்துடன் வந்தாள்?'' என்று பிரமித்துப் போன அமலன் வாய்திறந்து கேட்குமுன்னமே அவள் தலை குனிந்து சிரம் படிய, முழந்தாளிட்டு நமஸ்காரம் செய்தாள். மற்றொரு தாதி பெரிய புஷ்பமாலையுடன் அருகிலே வந்தாள். அவள் கையிலிருந்த மாலையை வாங்கி, ''அத்தான்! இது நான் அன்போடு உங்களுக்குச் சூட்டும் வெற்றி மாலை. என் தந்தையின் கடைசி முறி இதோ இருக்கிறது. இதை

ஏற்பதுடன் என்னையும் ஏற்று அருள வேண்டும்!'' என்று நாக் குழறக் கூறினாள்.

வீரம் கொழிக்கப் பேசிய வாயா இப்பொழுது தேனைவிட இனிக்கப் பேசுகிறது!

''இந்து!'' என்றான் அமலன் கழுத்தை நீட்டியவாறே.

''அத்தான்!'' என்றாள் இந்து மதி.

''உன்னை எதிரிகள் அபகரித்துச் சென்று விட்டதாக அருளேந்தியிடமிருந்து ஓலை வந்ததே?''

''என்னை மன்னிக்க வேண்டும். அது என்னுடைய வேலைதான். அருளேந்தியிடம் இரண்டு ஓலைகள் கையெழுத்து வாங்கி வந்திருந்தேன். என் தந்தையின் விருப்பப்படி நடக்க வேண்டிய கடைசிப் போட்டி இது. நான் யாரை விரும்புகிறேனோ அவருக்கு அல்லவா நான் மாலையிட வேண்டும்! போட்டியிலும் வென்று, என்னையும் வென்ற தங்களுக்காகவே தயாரித்தது இந்த வெற்றி மாலை. சின்ன அத்தானுக்கு மாலையிட என் உயிரினும் இனிய தோழி

# எங்கள் பகுதி

## * ஒளி விளக்கு

பாங்கு விளையாட்டுகளை விட்டுப் பள்ளி செல்கிறோமே என்று பரவசமடையா மனம்—ஆழ்ந்த சிந்தனையிலே மூழ்கிக் கிடக்கும் வதனம்—இவ்வாறு அட்டைப்படம் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது.

''அதிர்ஷ்டக் குழந்தை'' களைக் கண்டேன்; களிப்புற்றேன். ''வீடர் மணி'' கதையுலகிலே கற்பனையோடு இலங்கும் சிகரம்.

''சந்திரகிரிக்கோட்டை'' ஒரு வளரும் பிறைச் சந்திரன்: பூரண வனப்புடன் பிரகாசிக்கிறது.

''பாரசிக ரோஜா'' ஓர் ஒப்புயர் வற்ற விருந்து.

பேசாமடந்தையும் பேச்சாளராகலாமென்பதை, பளிங்குபோல் ''சூழ்நிலை'' எடுத்துக்காட்டுகிறது. நவீன காலத்திற்கேற்ற நல்ல கதை.

''எந்த ஊர்'' வேடிக்கையும் விந்தையும் நிறைந்த இனிமையான கதை. இளைஞர் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

தன் கடமையினின்று தவறியதால்-இசை வெள்ளத்தில் மிதக்கச் சென்றதால்-தன் தந்தையின் உயிருக்கு எமனாக வந்தது அந்த இசை இன்பம். கடமைக்குப் பிறகுதான் பொழுதுபோக்கு என்ற செறிந்த கருத்தைத் தெள்ளிதில் எடுத்துரைக்கிறது ''சேதுவின் சபதம்''

''மூன்று சோதனைகள்'' ஒரு பொழுதுபோக்கு.

''பாலர் கவியரங்கம்'' கவிமாரி பொழியும் மேகமாகவும், கற்பனையின் பிறப்பிடமாகவும், மதுரக் களஞ்சியமாகவும் அமைந்துள்ளது. இந்தப் பகுதி என்றென்றும் தொடர்ந்து வரவேண்டுகிறேன்.

''எங்கள் வீட்டுத் தங்கம்''—சுவையோடுகூடிய பாடல்.

''ரேடியோ வகைகள்'' அருமையான கட்டுரை. 'இன்றைய நிலையில் எதுவும் அதிசயமல்ல' என்பதை சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர். இது போன்ற விஞ்ஞானக் கட்டுரைகளும், பேராசிரியர் விஞ்ஞானத்தின் பதில்களும் ஒவ்வோர் இதழிலும் தொடர்ந்து வரின் இளைஞர்களும் எதிர்காலத்தில் விஞ்ஞான உலகில் சஞ்சரிக்க இயலும்.

''போட்டோ க்விஸ்'' மனத்திற்கு மகிழ்ச்சியளிக்கும் விருந்து.

ஏனைய பகுதிகளும், செய்திகளும் இன்பம் பயக்கின்றன. ஒன்றோடொன்று குறைவில்லாத பல சிறப்புகளுடன் மலிந்திருக்கும் கலைப்புதையலாகிய கண்ணன், பயனாலும் நயனாலும், கலையாலும், நிலையாலும், தூய்மையாலும், மேன்மையாலும் எந்நாளும் துலங்கி இளஞ் சிறுவருக்கு வழி காட்டும் ஒளி விளக்காக அமைய வேண்டுமென்பதே என் அவா!

ஜே. எம். சாலி, எறவாஞ்சேரி.

## கலைக் களஞ்சியம்

**1-3-55** கண்ணன் இதழைக் கையில் வாங்கினேன். ஆஹா! கண்ணனின் சக்திதான் என்ன! குழந்தைகள் மனத்தைக் கவருவது விளையாட்டு என்பதை அப்படியே அப்பட்டமாகச் சித்திரித்திருக்கிறதே!

அதிருஷ்டக் குழந்தைகள் திட்டம் அற்புதமானது. ''குழந்தைகளே'' என்ற பகுதியில் ஆசிரியர் சொல்லும் திட்டம் சரிதான் என்று சொல்லவும் வேண்டுமோ?

''எங்கள் வீட்டுத் தங்கம் என்ற கவிதை அப்படியே எங்கள் வீட்டுக் கன்றுக் குட்டியைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

---

*ரூ. 5 பரிசு பெற்ற கடிதம்.

''லீடர் மணி'' வர வர விறு விறுப்பாயிருக்கிறது. ஆனால் அவன் பல நாள் பட்டினியாயிருப்பதை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது.

''மூன்று சோதனைகள்'' முடிவு எதிர்பார்த்தபடி இல்லை.

''எந்த ஊர்'' என்பது மாணவர்களின் மனநிலையைக் கூறுவதற்கு எடுத்துக் காட்டாகும்.

''சேதுவின் சபதம்'' சிறந்த கதை என்பது என் அபிப்பிராயம்.

''ரேடியோ வகைகள்'' அறியாத பல விஷயங்களை அறிவுறுத்துகிறது.

''பாரஸீக ரோஜா'' பத்திரிகையின் எழிலைப் பன்மடங்காக்குகிறது.

''கேளுங்கள் சொல்கிறேன், போட்டோ க்விஸ்'' என்றும் போலவே மாணவர்களுக்கு அறிவு விருந்து அளிக்கின்றன.

சந்திரகிரிக்கோட்டை சரியான கட்டத்தில் புகுந்துள்ளது.

ஓர் ஏமாற்றம்! ஆம், ''என் வயது என்ன?'' என்பதன் விடை காணப்படாததுதான்.

விகடத் துணுக்குகள் பரவாயில்லை. மொத்தத்தில் கண்ணன் பல கலைகள் நிரம்பி வழியும் ஒரு கலைக் களஞ்சியம்.

எஸ். எம். பாலசுப்பிரமணியன்,
சங்கரன்கோயில்,

## எங்கள் பகுதி

**1 - 3 - 55** இதழின் அட்டைப் படம் என்றும்போல் நன்றாக, கருத்து நிறைந்ததாக உள்ளது.

தமிழ்த் தாத்தாவின் நூற்றோராவது பிறந்த நாளைக் கொண்டாடக் கூட்டப்பட்ட, கூட்டத்தினைப் பற்றியும், கிரிக்கெட்டைப் பற்றியும், குழந்தைகள் நாடக விழாவினைப் பற்றிய அறிவிப்பையும், ரெயில்வே கட்டணக் குறைப்பைப் பற்றியும், கண்ணன் பரிசுத் தொடர்கதையைப் பற்றிய விவரங்களையும் எங்களுக்கு அளிக்கும் ''செய்திகள்'' என்ற பகுதி மிகவும் அவசியம்.

1955 - ஆம் ஆண்டு அதிருஷ்டக் குழந்தைகளே! இந்த அதிருஷ்டம் பரீட்சையிலும் உங்களைத் தழுவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

என்னைப் போன்ற (சந்தாதாரற்ற) கண்ணன் வாங்குபவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை அறிந்து கொண்டேன். மிக்க மகிழ்ச்சி!

''எங்கள் வீட்டுத் தங்கம்'' என்ற பாடலும், ''பாலர் கவி அரங்க''மும் இனிப்பாக, திகட்டாததாக உள்ளன.

மணிக்கு ஆதரவு கிடைத்தால் தான் அவனுக்கும், அவனைவிட எங்களுக்கும் நிம்மதி ஏற்படும்.

''முன் வைத்த காலை பின் வைத்தல் கூடாது. சூழ் நிலைக்குத் தக்கவாறுதான் நம்மை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். இதை யாவரும் அறியவேண்டும்'' என்று சூழ்நிலை கூறுகிறது போலும்!

மற்றக் கதைகள் குறை சொல்லாத வகையில் அமைந்துள்ளன. துணுக்குகள் நன்றாக இல்லை. ''பையனின் வயது'' ஏழுதானே?

''ரேடியோ வகையிலிருந்து'' புதிதாகக் கண்டு பிடித்துள்ள ரேடியோ வகைகளைப்பற்றி ஓரளவு தெரிந்து கொண்டோம்.

''பாரஸீக ரோஜா'' கதை மிகவும் நன்றாக உள்ளது.

''போட்டோ க்விஸ்'' கண்ணுக்கு விருந்தளிக்கும் கலைப் பொக்கிஷம்.

''சந்திரகிரிக் கோட்டை'' பாராட்டைப் பெற்ற ஒரு சரித்திரத் தொடர்கதை.

''எங்கள் பகுதி''யைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? நான் இப்போது எழுதுவதுகூட எங்கள் பகுதிக்குத்தானே....!

ஜி. அரவிந்தன், நாகூர்.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன்

## அதிருஷ்ட நம்பர்கள்

இதோ பக்கத்தில் ஒரு நம்பர் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த நம்பர் அதிருஷ்ட நம்பராக இருக்கலாம். எல்லாக் கண்ணன் இதழ்களுக்கும் இதேமாதிரி ஒவ்வொரு நம்பர் உண்டு. அவற்றில் பத்து நம்பர்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட நம்பர்கள். அந்த அதிருஷ்ட நம்பருள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

**பரிசு விவரம்**

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ. 15/- | |
| இரண்டாம பரிசு | ரூ. 10/- | |
| மூன்றும் பரிசு (மூன்று பேர்களுக்குத் தலா) | ரூ. 5/- | வீதம் |
| நாலாம பரிசு (ஐந்து பேர்களுக்குத் தலா) | ரூ. 2/- | வீதம் |
| மொத்தம் பத்துப் பரிசுகளுக்கு | ரூ. 50/- | |

**உங்கள் கண்ணன் இதழைப் பத்திரமாக வைத்திருங்கள்**

**கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர்**

## பேனா நண்பர்கள்

1. கே. ஹாரிஸ்பாபு, S/o எஸ். எம், ஏ. கரீம், பி. ஏ., பி. எல்., ஜில்லா எம்பிளாய்மெண்ட் ஆபீசர், திருநெல்வேலி.

2. டி. வானமாமலை, B. 20. திருநகரி, திருப்பரங்குன்றம் போஸ்டு, மதுரை ஜில்லா.

3. எஸ். எம். சுல்தான், 12. கடைவீதி, சிலாபம், இலங்கை.

4. பழ. மெய்யப்பன், C/o P. L. M. வீடு, பூலாங்குறிச்சி போஸ்டு, ராமநாதபுரம் ஜில்லா.

5. கே. ரங்கநாதன், 5-ஆம் படிவம், C., ஸர். எஸ். ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

6. வா. ரா. சண்முகம்., வே. மு. தெ. மணி., பொ. க. சுந்தரம்., 39, மேலவீதி, திருப்பத்தூர், (வ. ஆ.)

7. எஸ். என். சினுஜுதீன், 67, பட்டாளம் ரோடு, சிலாபம், இலங்கை.

8. பி. ஏ. வேங்கடாசலம், 65, பாலகோபாலபுரம், பொள்ளாச்சி.

9. எஸ். எஸ். வாசன், 86, மூங்கப்பாடித் தெரு, குகை, சேலம்.

10. பி. கண்ணன், 7. குட்ஷெட் தெரு, மதுரை.

11. V. ஜகந்நாதன், 47. அவல்காரத் தெரு, வேலூர், (வ. ஆ.)

12. குமாரசாமி, 8. கரூர் கிருஷ்ணசாமி நாயுடு தெரு, வேலூர், (வ. ஆ.)

13. கே. ஸி. அமிர்தலிங்கம், 49, பிள்ளையார் கோயில் தெரு, தரனம்பேட், குடியாத்தம்.

Reg. No. M. 5542

# புதிய கண்ணன் வெளியீடுகள்

## அசட்டுப் பிச்சு - 'ஆர்வி' எழுதியது

ஏ. பி. என்றால் ஐயாசாமி அவர்களுடைய மகன் பிச்சுமணி என்பவனைத்தான் குறிக்கும் ஆனால் ஏ - என்றால் அசடு, பி - என்றால் பிச்சு என்று ஆகி. மற்ற ஊர்ப் பிள்ளைகள் எல்லாம் அவனை அசட்டுப் பிச்சு வாக்கிவிட்டார்கள். அவனுடைய தோற்றம், உடை, பேச்சு இவற்றிற்கும் அவனுடைய பெயருக்கும் அடடா, எத்தனை பொருத்தம்! ஆனால்,— அவனுடைய அதிருஷ்டம் இருக்கிறதே, அதை மட்டும் யாராலும் மாற்றவே முடியவில்லை. பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்த், புலிக்குட்டி, குடுமி வைத்தி இவர்களுக்கு எல்லாம் அசட்டுப் பிச்சு ஒரு பெரிய புதிராகவே ஆகிவிட்டான். பெரிய பெரிய திருட்டுக் கேஸ்களையெல்லாம் அசட்டுப் பிச்சு அநாயாசமாகக் கண்டுபிடித்து விடுகிறான். காணாமல் போன பெண், அகப்படாத பக்காத் திருடன்-இவர்களையெல்லாம் பிடித்துக் கொடுத்த அசட்டுப் பிச்சு, இன்ஸ்பெக்டர் குருப்பின் அபிமானத்துக்குப் பாத்திரமாகி, அதன் மூலம் நம்முடைய அபிமானத்துக்கும் பாராட்டுதலுக்கும் உரியவனாகிவிடுகிறான் அருமையான சம்பாஷணைகள்: அடுக்கடுக்கான சம்பவங்கள்; சுவையான கதைப் போக்கு; அழகழகான படங்கள் - எல்லாம் நிறைந்த இனிய புத்தகம் அசட்டுப் பிச்சு. 128 பக்கங்கள்.

விலை ரூ. 1/-

## தூங்கும் அழகி - சித்திரத் தொடர்கதை

ராஜாவுக்கு வெகுநாளாகக் குழந்தை இல்லையே என்று வருத்தம். கடைசியில் ஒரு மகானுடைய அருளால் ஓர் அழகான பெண் குழந்தை பிறக்கிறது. அந்தக் குழந்தையை ராஜாவுடைய இளைய சகோதரன் மந்திரவாதியின் உதவி கொண்டு காணாமல் அடித்துவிடுகிறான். பதினாறு வருஷங்களாக அவள் இருக்குமிடத்தையே ஒருவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. சாப்பிடும் நேரம் போக மீதி நேரங்களில் தூங்கிக் கொண்டே யிருந்த அந்த அழகியைக் கடைசியில் பாலகன் என்பவன் மீட்டுக்கொண்டு வருகிறான். ஜின் தேவதையும் பிரம்ம ராட்சஸனும் வருகிற இந்தக் கதை அற்புதச் செயல்கள் நிறைந்த கதை. அழகான சித்திரங்கள் நமது கருத்தைக் கவர்கின்றன.

விலை 4 அணா

## நீச்சல் பழக்கம் - 'டிமான்ஸ்டிரேட்டர்'

நீச்சல் அபாயகரமான பயிற்சிதான். ஆனால் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய பயிற்சி. அதை எப்படிக் கற்றுக்கொள்ள வேண்டும்; எந்த மாதிரி கற்றுக்கொண்டால் சுலபமாகவும் அபாயமில்லாமலும் நன்றாகக் கற்றுக்கொள்ளலாம் என்று இந்தப் புத்தகத்தில் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

விலை 3 அணா

**கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு**

விவரங்களுக்கு:

**கலைமகள் காரியாலயம் :: மயிலாப்பூர், சென்னை-4**